பக்கங்கள்: 18

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 25 புதன்கிழமை 08.02.2023 கதிர் 92

### இது ரகசியம் அல்ல!

நடிகர் ராமராஜன் நடித்த கரகாட்டக்காரன் படம் அது வெளிவந்த காலத்தில் சக்கை போடு போட்டம் படம். அதிலே ஒரு நகைச்சுவைக் காட்சி வரும். ராமராஜனின் கரகாட்டக்கோஷ்டி வைத்திருந்த கார் பழுதுபட்டு அதைத்

2

# இனப்பிரச்சினை தொடர்பான எந்தவொரு இறுதித் தீர்வுக்கும் தமிழர்களின் ஆணை வாக்கெடுப்பு மூலம் பெறப்படவேண்டும்





## மட்டகளப்பு பிரகடனம் வலியுறுத்து

(ச.கிருபாகரன்)

ஈழத் தமிழரின் தேசிய இனப் பிரச்சனையில் மரபு வழித் தாயகம், தமிழ் தேசியம், தன்னாட்சியுரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும், சர்வதேசத்தினால் ஒழுங்குபடுத்தப் பட்டுக் கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம், தமிழ் மக்களின் ஆணை பெறப்படவேண்டும் என்பதே எமது உறுதியானதும்

2

# அரசின் புதிய வரிகளை எதிர்த்து இன்று தொழிற்சங்க போராட்டம்

* மருத்துவர்கள் , விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகள் அடையாள வேலை நிறுத்தம்
* பிரதேச செயலாளர்கள் சுகவீன விடுமுறை
* வங்கியாளர்கள் அரை நாள் விடுப்பு!

(ம.அ.குமரன்)

அரசு அண்மையில் அறிமுகப்படுத் திய தனிநபர் வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டிலுள்ள பல தொழிற்சங்கங்கங்கள் இன்று போராட்டத்தில் ஈடுபடுகின்றன.

10

## ‘தில்’ இருந்தால் தேர்தலை மார்ச்சில் நடத்திக் காட்டுக!

### அரசுக்கு எதிரணி பகிரங்க சவால்



துணிவு இருந்தால் உள்ளூராட்சி சபைத் தேர் தலை எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி நடத்திக் காட்டுங்கள்.

– இவ்வாறு அரசுக்குப் பகிரங்க சவால் விடுத்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப் பினர் அஜித் மானப்பெரும.

10

## தேர்தலுக்கு இடையூறு ஏற்படுத்தினால் மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை!

### அரசமைப்பிலுள்ள சரத்தை நினைவுபடுத்துகின்றது ஜே.வி.பி.

தேர்தலுக்கு யாரும் இடையூறு செய்ய முடியாது. அப்படிச் செய்தால் அரசமைப்பின்படி மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை வழங்க முடியும்.

– இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளு மன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:

இந்தத் தேர்தல் அரசுக்குத் திருப்பு முனை. அரசு மண்ணைக் கவ்வப் போகும் தேர்தல்.

10

## வழக்கு விசாரணை நாளைமறுதினத்திற்கு ஒத்தி வைப்பு.

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.07

முல்லைத்தீவு மாவட்டம் கரைத் துறைப்பற்று பிரதேச சபையின் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமை

10

## 13ஐ அமுலாக்க முயன்றால் பெரும் போராட்டம் வெடிக்கும்

### ஜனாதிபதியை மிரட்டுகின்றார் எல்லே குணவங்ச தேரர்



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த முற்பட்டால் அதற்கு எதிராக மாபெரும் போராட்டம் வெடிக்கும்.

– இவ்வாறு எல்லே குணவங்ச தேரர் எச்சரிக்கை விடுத்தார்.

11

## 30 ஆவது தடவையாக சபைக்கு இன்று செல்கிறார் ஜனாதிபதி



ரணில் விக்கிரமசிங்க ஜனாதி பதியாகப் பதவியேற்றதன் பின் னர் இன்று 30 ஆவது தடவை யாக நாடாளுமன்றம் செல்கின் றார்.

ஜனாதிபதிகள் யாரும் அதிக மாக நாடாளுமன்றம் செல்வ தில்லை.

11

## ரணில் - ‘மொட்டு’ ஆட்சி நீடித்தால் மக்கள் பட்டினியால் செத்து மடிவர்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எச்சரிக்கை

11

## ஆட்சியை நடத்தும் திறன் எதிரணிகளுக்கு இல்லை

### இப்படிக் கூறுகின்றது ‘மொட்டு’

தற்போதைய நாடாளுமன்றத்தில் எதிரணி வரிசை யில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் எந்தவொரு கட்சிக் கும் ஆட்சியைக் கொண்டு நடத்தும் திறமை இல்லை.

– இவ்வாறு இராஜாங்க அமைச்சரும் மொட்டுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான ஜானக வகும்புர தெரிவித்தார்.

11

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தள்ளிக்கொண்டு செல்லும்போது, திடீரென நடிகர் கவுண்ட மணி நடிகர் செந்திலை கன்னத்தைப் பொத்தி அடிப்பார். ராமராஜன் ஏன்னே திரும்பத் திரும்ப அடிக்கிறீங்க என்று கேட்கும் போது. இந்தக் கார நம்ம வச்சிருக்கோம் இந்தக் கார வச்சிருந்த சொப்பன சுந்தரிய இப்ப யாரு வச்சிருக்கான்னு கேக்கிறான் என்று பதில் சொல்வார்.

சரி இப்ப விடயத்துக்கு வருகின்றேன்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிலத்தில் இந்திய அரசின் பணம் 100 கோடி ரூபாவில் கலாச்சார மண்டபம் நிமிர்ந்து நிற்கிறது. இந்திய அரசு, இலங்கை அரசு மற்றும் மாநகர சபை என் முத்தரப்பு ஒப்பம் எழுதப்பட்டே இந்தக் கட்டடத்தை அமைக்கும் பணி தொடங்கியது. கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டதும் அது யாழ். மாநகர சபையிடம் ஒப்படைக்கப்படும் என்பதே உடன்படிக்கை.

கட்டடம் கட்டிமுடிக்கப்பட்ட 4 ஆண்டுகளாகிவிட்டன. ஆனால் அது இன்னமும் மாநகர சபையிடம் ஒப்படைக்கப்படவில்லை. இந்த விடயத்தை பல தடவைகள் இங்கே சுட்டிக்காட்டிவிட்டேன். இந்தக் கட்டடத்தை மாநகர சபையால் நிர்வகிக்க முடியாது, அது ஒரு வெள்ளையானை என்பதையும் சொல்லியிருக்கிறேன். அதனால் கொழும்பு அரசின் அமைச்சின் உதவியை மாநகர சபை கடந்த காலங்களில் நாட்டியதும் உலகறிந்த உண்மை. ஆனால், மாநகர சபையோடு சேர்ந்தில்லாமல் கட்டடத்தை தானே முழுமையாகக் கைப்பற்றி ஆளநினைக்கிறது கொழும்பு அமைச்சு.

இந்தியாவிற்கு அதில் உடன்பாடில்லை என்பதால் குறைந்த பட்சம் கட்டட நிர்வாகத்தில் தமது ஆதிக்கமே மேலோங்க வேண்டும் என்பதில் உறுதியாக நிற்கின்றது கொழும்பு. எந்த இந்த நிர்வாகத்திற்குள் உட்புகவே முயல்கின்றது.

மிகப் பெரிய கட்டடமான இதனைப் பராமரிக்கும் நிதி வல்லமை மாநகர சபையிடம் கிடையாது. அதனால்தான் கொழும்பின் உதவியை நாட மாநகர சபை முற்பட்டது. ஆனால், அது சரிவராத நிலையில் கட்டடத்தைப் பராமரிப்பதற்கான செலவுகள் அனைத்தையும் 5 ஆண்டுகளிற்குத் தானே பொறுப்பெடுப்பதாக இந்தியா முன்வந்தது. அது வெளிநாட்டு நிதி என்பதால் மத்திய திறைசேரியின் ஊடாக மட்டுமே மாநகர சபைக்கு வர முடியும் என்றகூறி இடைத்தரகராகத் தன்னைப் புகுத்திக் கொண்டது கொழும்பு. அந்தப் பணம் இனி எப்போது வந்து சேரும் என்பது தெரியாது.

எதிர்வரும் 11ஆம் திகதி இந்தக் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் சுதந்திர தின நிகழ்வையடுத்து மண்டபம் மாநகர சபையிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது கட்டடம் அப்படி மாநகர சபையிடம் கையளிக்கப்படாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

11ஆம் திகதி கலாசார மண்டபத்தின் நடுவே ஓர் நினைவுக்கல் திறப்பதற்கு மத்தியும் மாகாணமும் இரகசியமாக ஏற்பாடு செய்யும் கல்வெட்டில் ஜனாதிபதி, பிரதமர், மத்திய கலாச்சார அமைச்சர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருடன் இந்திய தூதுவரின் பெயர் மட்டுமே பொறிக்கப்படவுள்ளது. மாநகர சபை முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. திறப்பு விழா பற்றி எந்தவொரு தகவலும் மாநகர சபையுடன் பகிர்ந்துகொள்ளப்படவில்லை என்று முதல்வர் ஆனல்ட் கொழும்பு புத்தசாசன கலாச்சார அமைச்சரிடம் நேரடியாகவே தனது ஆதங்கத்தை தெரிவித்தபோது, இதற்கான சகல ஏற்பாடும் மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் ஊடகவே இடம் பெறுகின்றது எனக்கூறி அவர் தப்பித்து விட்டார்.

யாழ். மாநகர சபைக்காக அதன் நிலத்தில் இந்திய மக்களின் உதவியில் கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தின் திறப்பு விழாவில் மாநகர சபையை முற்றாகப் புறக்கணித்துவிட்டு ஆளுநர் அலுவலகமும் மாகாண அலுவலகமும் கொழும்பு அமைச்சும் காரியமாற்றுவதும் கட்டடத்தை மாநகர சபையிடம் ஒப்படைக்கும் நிகழ்வை நிறுத்துவதும் பெரும் சந்தேகங்களைக் கிளப்பியிருக்கிறது. இந்த உட்சதி எதற்காக? கட்டடத்தை ஒப்படைக்காமல் அதை கொழும்பே கைப்பற்றிக்கொள்வதற்கான முயற்சியா என்கிற சந்தேகமே அது.

கலாச்சார மண்டபம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குரியது என்ற நம்பிக்கையில் ரூ. 30 லட்சத்துக்கும் மேற்பட்ட பணத்தை அதன் மின் கட்டணங்களுக்காக மாநகர சபையே செலுத்தியிருக்கிறது. இந்த நிலையில் கட்டடத்தை யார் வைத்திருக்கிறார்கள் என்பதே மில்லியன் கணக்கான கேள்வி.

கரகாட்டக்காரனில் செந்தில் கேட்ட மாதிரி, இந்தக் கலாசார மண்டபத்தையும் இப்போது யார் வைத்திருக்கிறார்கள்?

- இடிமின்னல் -

## இனப்பிரச்சினை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறுதியானதுமான நிலைப்பாடாகும்.

இவ்வாறு பிரகடனப்படுத்தியுள்ளது வடக்கிலிருந்து கிழக்கிற்கான பேரணி.

அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து, எம்மை நாமே ஆளக் கூடிய நிரந்தரத் தீர்வும் பொதுவாக்கெடுப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை, தமிழ் மக்கள் சார்பாக இந்தப் பிரகடனம் உலகுக்கு அறிவித்துள்ளது.

வடக்கிலிருந்து சனிக்கிழமை கிழக்கு நோக்கி புறப்பட்ட மக்கள் பேரணி நான்காவது நாள் மாலையில் மட்டக்களப்பை அடைந்தது. வெபர் விளையாட்டு மைதானத்தில் பேரணியின் பிரகடனம் வாசிக்கப்பட்டதுடன் பேரணி முடிவடைந்தது.

திங்கட்கிழமை இரவு திருகோணமலை வெருகலில் தங்கிய பேரணி, செவ்வாய்க்கிழமை காலை வெருகல் ஸ்ரீ வேலாயுதசுவாமி ஆலயத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி புறப்பட்டது. வாகரைக் கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் சென்ற பேரணி அங்கு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் தொடர்ந்து முன்னேறியது.

கதிரவெளிச் சந்தி, மாங்கேணிச் சந்தி, வாழைச்சேனை, அதைத் தொடர்ந்து கிரான், வந்தாறுமூலை, சித்தாண்டி, செங்கலடி என்று தொடர்ந்து பயணித்து தன்னுடைய பயணத்தை மட்டக்களப்பில் நிறைவு செய்தது.

பேரணி மட்டகளப்புக்குள் வருகை தருகையில் பொதுமக்கள், அரசியல் வாதிகள், ஆலயத் தலைவர்கள், விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் வீதிகளில் திரண்டு நின்று உணர்வுபூர்வமான ஆதரவினை வழங்கிக் கொண்டனர்.

வடக்கிலிருந்து புறப்பட்ட இந்தப் பேரணிக்கு ஆதரவாக அம்பாறையிலிருந்து தொடங்கிய பேரணி காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, கல்லாறு, களுவாஞ்சிகுடி, குருக்கள்மடம், ஆரையம்பதி, கல்லடிப் பாலம் ஊடாக மட்டக்களப்பு நகரை வந்தடைந்தது. அங்கு இரு பேரணிகளும் ஒன்றாகச் சங்கமித்தன.

இதனையடுத்து மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபியில் உயிர்நீத்த ஊடகவியலாளர்களுக்கு பேரணியில் சென்றவர்கள் அஞ்சலி செலுத்தினர். பின்னர் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தனர்.

அங்கே பல்கலைக்கழக மாணவர்கள், சமயப் பிரமுகர்கள், அரசியல் வாதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் எழுச்சிப் பேரணி மட்டக்களப்புப் பிரகடனம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ஜெயராம் றாபினால் வாசிக்கப்பட்டது. அதனோடு எழுச்சிப் பேரணி நிறைவுக்கு வந்தது.

அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு.

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை, அதன் இறைமை மற்றும் தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் வரலாற்றுத் தாயகம் அங்கீகரிக்கப்படுவதோடு, முதலில் தமிழர் தாயகத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்.

தமிழ்மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும்.

தீர்வுக்காகக் அரச மற்றும் தமிழர் தரப்புகளுக்கு இடையே ஏற்படுத்தப்படும் உடன்படிக்கை ஒருதலைப்பட்சமாக ரத்து செய்யப்பட்டால், சர்வதேச மற்றும் ஐக்கிய நாடுகள் அவையின் ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு என்பவற்றோடு, தமிழ் மக்கள் ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் தமது அரசியல் எதிர்காலத்தை தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற ஏற்பாடு உள்ளடக்கப்படவேண்டும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
FACULTY OF MEDICINE

**Inauguration of Academic Programme**

The Academic Programme for the New Batch (2021 A/L) of Medical Students will commence on **Monday, 27th February 2023**. An Inauguration Programme will be held on 27th February 2023 at 8.30 am in the Hoover Auditorium, Faculty of Medicine, University of Jaffna.

It is appreciated that the parents of each student attend this inauguration programme.

Address : Faculty of Medicine,
University of Jaffna
Adiyapatham Road,
Kokuvil,
Jaffna.

**Registrar**
**University of Jaffna**




காலைக்கதிர்
Kalaikkathir

**'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு -077 307 8799**

# இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!



கொழும்பு, பெப்.08

இலங்கை மற்றும் மாலைதீவுக்கு இடையிலான கலாசார ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்காக தயாரிக்கப்பட்ட ஒப்பந்த வரைவுக்கு சட்டமா அதிபரின் அனுமதியும் வெளிவிவகார அமைச்சின் இணக்கமும் கிடைத்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# தனித் தமிழ்க் கட்சிகளில்தான் தேர்தலில் இனி போட்டியிடுவாராம் வியாழேந்திரன்



கிழக்கு தமிழர்களின் இருப்பை முஸ்லிம் சிங்கள இனவாதிகளிடம் இருந்து காப்பாற்றுவதற்கு அனைத்து தமிழர்களும் ஒன்றிணைய வேண்டும் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

தனி தமிழ் கட்சியில் தான் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவேன் எனக் குறிப்பிட்ட அவர் அப்போது எமது இருப்புக்காக நாங்கள் குரல் கொடுப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு,மண்முனை தென் மேற்கு பட்டிப்பளை பிரதேசசபைக்குட்பட்ட பகுதியில் உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழர் மகா சபையில் போட்டியிடும் வேட்பாளர் அறிமுக கூட்டம் கொக்கட்டிச்சோலை, முனைக்காட்டில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# ராஜிதவுக்கு எதிரான வழக்கு முக்கிய ஆவணம் மிஸ்ஸிங்!



முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவிருந்த ஆவணங்களில் ஓர் ஆவணம் காணாமல் போயுள்ளது.

இலஞ்ச, ஊழல் ஆணைக் குழு சமர்ப்பித்த திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன.

மோதர மீன்பிடி துறைமுகத்தை தனியார் நிறுவனத்துக்குக் குறைந்த விலைக்கு குத்தகைக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படுத்தினார் என முன்னாள் அமைச்சர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கின் முறைப்பாட்டில் ஆதார ஆவணமாக குறிப்பிடப்பட்ட கடற்றொழில் துறைமுக சட்டபூர்வ கூட்டுத்தாபனத்தின் 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதியிடப்பட்ட பணிப்பாளர் சபையின் பத்திரம் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் தனது சேவையை நிறைவு செய்தார் தூதுவர் எலேனோரா டிமிட்ரோவா!



இலங்கைக்கான பல்கேரியத் தூதுவர் எலேனோரா டிமிட்ரோவா இலங்கையில் தனது சேவையை நிறைவு செய்து கொண்டு தனது நாட்டுக்கு செல்வதற்கு முன்னர் திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்தார்.

எலினோராவுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, இலங்கைக்காக அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டியதுடன் அவரது எதிர்கால முயற்சிகளுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

எதிர்காலத்திலும் இலங்கைக்கு அனைத்து விதமான ஆதரவையும் வழங்குவதாக இலங்கைக்கான பல்கேரியத் தூதுவர் எலேனோரா டிமிட்ரோவா தெரிவித்தார்.

**Jaffna College Institute of Technology**

**பின்வரும் பாடநெறிகள் Feb. மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.**

**1. Computer Certificate Courses ( 3 – 4 months Part time)**
- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (Page Maker, Photo Shop & CorelDraw)
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**2. Civil Draftsperson ( one year )**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
Course leads to:
*Follow courses in level 5

**3. FIT - pre degree Programme for University of Colombo IT degree.**
Qualification GCE(O/L)

**4. Certificate in Craft Courses (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)**
- குளிரூட்டுதல் பயிற்சி நெறி -Refrigeration & Air-Conditioning Mechanic
- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்- NVQ Level -3 (Accredited) –Aluminum Fabricator
- மின்னியலாளர் (Certificate in Electrician)- NVQ

பாடத்திட்டத்தை தழுவியது
Our Civil Draftsperson & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too
மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
(TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Library & Sports
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க
**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai. Tel. no: 0212250975 / 0212223382.**

# பணம் தரப்படாவிட்டால் நீதிமன்றம் செல்வோம்!

## தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தேவையான ஏற்பாடுகளை கோரி நிதியமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு பதில் கிடைக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உரிய பதில் வழங்கப்படாவிடின் உயர் நீதிமன்றத்துக்கு இது தொடர்பில் அறிவிக்கப்படும் என அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அரசாங்க அச்சகத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், தபால் திணைக்களம் போன்றவற்றால் வாக்களிக்கப் பங்களிப்பு செய்யும் நிறுவனங்களுக்கு முற்பணத்தை வழங்குமாறு கோரியுள்ளதாகவும், அந்தக் கோரிக்கைகளுக்கு அமைவாக திறைசேரி செயலாளரிடம் அடிப்படைத் தொகையாக 77 கோடி ரூபா கோரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மனிதக் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டு அம்பலாந்தோட்டையில் ஒருவர் கைது!

## உள்ளூராட்சி வேட்பாளரை தேடி வேட்டை

மனிதக் கடத்தலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் மற்றுமொரு சந்தேக நபர் அம்பலாந்தோட்டையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் வெலிபடன்வில, நோனாகம, அம்பலாந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். இவர் தாய்லாந்தில் தொழில் பெற்றுத் தருவதாக கூறி சுமார் 19 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைதானவர் தாய்லாந்தில் தொழில் தருவதாக கூறி பணத்தை பெற்றுக் கொண்டு சுற்றுலா விசாவில் அழைத்துச் சென்றார் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொருவர் தப்பிச் சென்றுள்ளதுடன், அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தப்பியோடிய சந்தேக நபர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வேட்பாளர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபர் அம்பாந்தோட்டை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்கள் பேரியக்கம் உருவாவதன் அவசியம்

**ஈழத் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் மரபு வழித் தாயகம், தமிழ் தேசியம், தன்னாட்சியுரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும், சர்வதேசத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம், தமிழ் மக்களின் ஆணை பெறப்படவேண்டும் என்பதே எமது உறுதியானதும் அறுதியானதுமான நிலைப்பாடாகும்.**

**அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து, எம்மை நாமே ஆளக் கூடிய நிரந்தரத் தீர்வும் பொதுவாக்கெடுப்பில் உள்ளடக்கப் படவேண்டும்.**

**இப்படி மட்டக்களப்பில் நேற்று வெளியிடப்பட்ட பேரணி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நல்ல விடயம். ஆட்சியாளர்களின் எந்தவொரு தீர்வு தொடர்பிலும், முடிவுகள் தொடர்பிலும் மக்களின் கருத்துக்களை அறிந்து செயற்படுவது மக்களாட்சி மாண்பின் உச்சம். அதைத்தான் இந்த அறிவிப்பும் கோருகின்றது. அந்த வகையில் இதுவொரு சிறப்பான முயற்சிதான். ஆனால், அதை நிறைவேற்றுவதற்கான வழி வகை என்ன?**

**யாழ்ப்பாணப் பல்லைக்கழக மாணவர்களால் இந்தப் பேரணிக்கான அறிவித்தல் வழங்கப்பட்டது முதல் கடந்த காலங்களைப் போலன்றி இதன் ஏற்பாடுகளில் சில வித்தியாசங்களைக் காண முடிந்தது. முடிந்தவரைக்கும் அரசியல் கட்சி சார்பற்று பொதுமக்கள் போராட்டமாகப் பேரணியை முன்னிறுத்தும் முயற்சியாக அது காணப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால் அரசியல் போராட்டம் ஒன்றிலிருந்து அரசியல் கட்சிகளின் பங்களிப்பைத் தள்ளிவைக்கும் முயற்சியாக அது இருந்தது.**

**கடந்த காலப் பட்டறவுகளின் அடிப்படையில் மாணவர்களும் அவ்ர்களோடு சேர்ந்தியங்கியவர்களும் இந்த முடிவுக்கு வந்திருக்கலாம். இதன் விளைவாகப் பேரணிக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்துவிட்டும், பேரணியில் தலையைக் காட்டிவிட்டும் அரசியல்வாதிகள் மெல்ல ஒதுங்கிக்கொண்டார்கள். பேரணியும் ஏற்பாட்டாளர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி அரசியல் கட்சி சார்போ சாயமோ இன்றி வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. சிறப்பான அறிவிப்பு ஒன்றையும் மேற்கொண்டிருக்கின்றது.**

**அந்த அறிவிப்பை நடைமுறைப்படுத்திக் காட்டுவதற்கான பொறுப்பு யாரைச் சார்ந்தது? அந்தப் பொறுப்பை நிறைவேற்றிவதிலும் இப்போதுபோலவே அரசியல் கட்சிகளை எல்லைக்கு வெளியே நிற்க வைத்து மக்கள் திரட்சியை ஒன்றிணைக்கும் வல்லமை, இயக்கு கட்டமைப்பு, பொதுநிலை எங்கு யாரால் எப்போது ஏற்படுத்தப்படும்? அதற்கான பொருளாதார வளமும் சக்தியும் எப்படிக் கிட்டும்? எவ்வளவு காலத்தில் இவற்றையெல்லாம் திரட்ட முடியும்?**

**இது பற்றிய விடங்களையும் அடுத்த கட்டங்களில் சிந்தித்து மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். அப்போதுதான் மட்டக்களப்பு அறிவிப்பு மக்களுக்குப் பயனுள்ளதாக அமையும். இல்லையேல், அரசியல் கட்சிகளின் தீர்மானங்களைப் போல, குறிப்பாக வட்டுக்கோட்டைத் தீர்மானம் போல அரசியல் இலாபங்களுக்கான வெற்று முழக்கங்களாக அவை முடிந்துவிடும். எனவே இப்போது பேரணியைத் தொடங்கியிருப்பவர்கள், அதன் குறிக்கோளை அடைவதற்கான மக்கள் பேரியக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான அரசியல் முனைப்பை உடனடியாக தொடங்குவது அவசியம்.**

**மக்கள் பேரியக்கத்தைக் கட்டியெழுப்புவது என்பது மற்றொரு தேர்தல் அரசியல் கட்சியை உருவாக்குவதைக் குறிப்பதல்ல. மக்களுக்காக, மக்களின் சிந்தனை வெளிப்பாடான, அரசியல் கட்சி சார்பற்ற, இலக்குகளை நோக்கி மக்களையும் அரசியல் கட்சிகளையும் வழிப்படுத்தக்கூடிய, தன்னலமற்ற அமைப்பைக் குறிக்கின்றது. அப்படியொன்று இல்லாமல் அறிவிப்புக்களால் சாதிக்க முடியப்போவது ஒன்றுமில்லை.**

## மக்கள் ஒருபோதும் வீதிக்கு வந்து தேர்தலை நடத்தக் கோரவில்லை

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையின் இன்றைய நிலைமையில் மக்கள் ஒருபோதும் வீதிக்கு வந்து தேர்தல் கேட்கவில்லை. பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்குமாறே அவர்கள் கூறுகின்றனர்.

– இவ்வாறு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வாக்குரிமையை நிலைநாட்டியவர் மஹிந்த ராஜபக்ஷதான். போரை நிறைவு செய்த பின் வடக்கு, கிழக்கில் நடத்தப்படாமல் இருந்த மாகாண சபைத் தேர்தலை நடத்தினார்.

கள்ள வாக்குகள் போடப்பட்ட ஒரு காலம் இருந்தது. தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்தி கள்ள வாக்குகள் போடுவதை மஹிந்த ராஜபக்ஷ நிறுத்தினார். அதனால் தேர்தல் தேவையில்லை என்று சொல்லுவதற்கு நாம் தயாரில்லை.

ஆனால், இன்று இருக்கின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமை திரிவுபடுத்தப்பட்ட ஒன்று. இது பற்றி எவரும் நாடாளுமன்றில் பேசுவதில்லை.

ஜே.வி.பி. எல்லாவற்றையும் விமர்சிக்கின்றது. ஒருபோதும் இந்தத் தேர்தல் முறைமை பற்றி ஜே.வி.பி. கூறியது இல்லை. அவர்களுக்குத் தேவை உறுப்பினர்களின் எண்ணிக்கை மட்டும்தான். முடிந்தால் ஜே.வி.பி. ஒரு சபையையாவது கைப்பற்றிக் காட்டட்டும்.

மக்கள் ஒருபோதும் வீதிக்கு வந்து தேர்தல் கேட்கவில்லை. பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்குமாறே அவர்கள் கூறுகின்றனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நாட்டை முன்னேற்றுவோம் என்று நாம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய போதிலும் நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக அது முடியாமல் போனது.

இதற்கு எதிராக எழுந்த போராட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தடுக்கப்பட்டது. இல்லாவிட்டால் நாடு மிக மோசமான நிலைக்குச் சென்றிருக்கும். 1988, 1989 இல் இடம்பெற்ற இடம்பெற்ற அதே அழிவு இடம்பெற்றிருக்கும். போராட்டத்துக்கு ஜே.வி.பியின் 50 வீத பங்களிப்பு உண்டு. இதை ஜனாதிபதி முடக்கி நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்கின்றார் – என்றார்.

## அரசின் வருமானம் சடுதியாக வீழ்ந்தமைக்கு கோட்டாபயவின் நடவடிக்கைகளே காரணம்!

### பந்துல குணவர்த்தன சாடல்



சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால் இலங்கையின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டால் மாத்திரமே ஏனைய வெளிநாட்டு கடன்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மாறாக அவ்வாறு எதுவும் இல்லை என்று கூறுபவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகவே இருப்பர் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தனக்கு கிடைக்கப்பெற்ற தவறான ஆலோசனைகளால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சகல வரிகளையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்.

இதன் காரணமாகவே அரசாங்கத்தின் வருமானம் சடுதியாக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறிருப்பினும் இதனால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் அங்கத்துவநாடு என்ற அடிப்படையில் மீண்டும் வரிகளை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டுக்கமையவே மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை இன்றி நாட்டை ஒருபோதும் நிர்வகித்துச் செல்ல முடியாது. சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால், சர்வதேசத்துடன் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களிலும் எம்மால் ஈடுபட முடியாது. அவ்வாறில்லை என்று கூறுபவர்களை மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் என்றே கூற வேண்டும்.

சர்வதேசத்துடன் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களையும் செய்ய முடியாவிட்டால் எரிபொருள், உரம், எரிவாயு உள்ளிட்ட அனைத்து இறக்குமதிகளும் பாதிக்கப்படும்.

இறக்குமதிக்காகஎம்மால்விடுக்கப்படும் கடன் சான்று பத்திரம் கூட ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. எனவே விரும்பாவிட்டாலும் குறுகிய காலத்துக்கு இந்த வரி சுமையை ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் பட்சத்தில் 290 கோடி டொலர் மாத்திரமே கிடைக்கப் பெறும் என்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அவ்வாறு எதுவும் இல்லை. நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டால் மாத்திரமே அமைச்சுக்களுக்கு கிடைக்கப் பெற வேண்டிய ஏனைய வெளிநாட்டு கடனுதவிகளும் கிடைக்கும்.

அவ்வாறில்லை என்று கூறுபவர்கள் தம்மிடமுள்ள மாற்று வழிகளை அரசாங்கத்திடம் முன்வைக்க முடியும். இவை தற்காலிகமான வேதனையாகும். எனவே, விரும்பாவிட்டாலும் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தலை நடத்துவதா இல்லையா உயர் நீதிமன்றமே தீர்மானிக்கும்!



## என்கிறார் மைத்திரி

தேர்தலை நடத்துவதா இல்லையா என்பதை உயர் நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் – தேர்தல் ஒத்திவைக்கப்படுமா இல்லையா என்பதை என்னால் கூற முடியாது. அது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவும், அரசாங்கமும் தான் முடிவு செய்ய வேண்டும்.

இது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் 09 ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. இதன்போதே திட்டமிட்ட திகதியில் தேர்தல் நடைபெறுமா இல்லையா என்பது தெரியவரும். – எனத் தெரிவித்துள்ளார்.

# துருக்கிக்கு உதவி வழங்க இலங்கை தயாராகவுள்ளது!

## அலி சப்ரி கூறுகிறார்

துருக்கி அரசாங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டால் உதவிகளை வழங்க இலங்கை தயாராக இருக்கின்றது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அதற்காக இராணுவத்தினர், மருத்துவர்கள் மற்றும் பொறியியலாளர்கள் உட்பட 300 பேர் கொண்ட இராணுவக் குழுவொன்றை களமிறக்க இலங்கை தயாராக இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, துருக்கியில் உள்ள 13 இலங்கையர்களுடன் தொடர்ந்தும் தொடர்பில் உள்ளதாக இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் 14 இலங்கையர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாக துருக்கிக்கான இலங்கை தூதுவர் அசாந்தி திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மற்றுமொரு நபரான பெண்ணுடன் தொடர்புடைய ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.








## தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கும் சவூதிக்கும் இடையில் ஒப்பந்தம்!

கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு , இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தரப்பினர்களின் ஒருங்கிணைப்புடன் வெளிநாடுகளில் திறன்களை சான்றுப்படுத்தும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இலங்கை திறன்சார் உழைப்பு படையின் தகைமைகளை வெளிநாடுகளுடன் ஒப்புமைப்படுத்தும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் மூலம் எமது நாட்டின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உயர் பெறுமதியுடனும் , கண்ணியத்துடனும் மற்றும் அதிக பொருளாதார நன்மைகளுடனும் கூடிய வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தி வழங்க முடியும்.

அதற்கமைய சவூதியின் மனித வளங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு மற்றும் 3ஆம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுக்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்த வரைவுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைத்துள்ளது. அதற்கமைய குறித்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## தும்பறை சிறைச்சாலையில் கைதியிடம் இரத்தினக்கல்!

தும்பறை சிறைச்சாலையில் கைதி ஒருவரிடமிருந்து இரத்தினக்கல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிறைச் சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நட வடிக்கையின் போதே இது கைப்பற்றப்பட்டது.

தேடுதல் நடவடிக்கையின் போது, குறித்த கைதி தனது இடுப்பில் இரத்தினக்கல் ஒன்றை மறைத்து வைத்திருந்தார். இவர் சில தினங்க ளுக்கு முன்னரே விளக்கமறியலில் வைக்கப்பட்ட கைதி என சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த மாணிக்கக்கல் சந்தேக நபர் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டதுடன் இது தொடர்பில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டு உரிய மதிப்பீட்டின் பின்னர் நீதிமன்றத் துக்கு அறிவிக்கப்படும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## இந்தியாவின் தேசியமும் அதைப் பற்றிய பார்வைகளும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 260

ஒரு மதம், அன்றில் ஓர் இனம் அல்லது ஒரு மொழி என்ற அடிப்படையில் இந்தியாவின் ஒருமைப்பாடும் தேசியமும் உருவாகவில்லை. அவர்களது ஒற்றுமையும் தேசியமும் 'வெள்ளையனே வெளியேறு!' என்பதாலும், நாட்டில் இருந்த யாவருமே ஒன்றிணைந்து வெள்ளையனை அகற்ற வேண்டும் என்ற மனோநிலை கொண்டிருந்தமையாலும் எழுந்தது.

"உண்மையான வரலாறுகளின் பிரகாரம் எந்த ஒரு தேசமும் போரில்லாமல் பிறந்ததில்லை. எந்த ஒரு சமுதாயமும் ஆயுதப் போராட்டம் ஒன்று இல்லாமல், அன்றில் அப்படியான ஒன்று உருவாகலாம் என்ற பயம் இல்லாமல், உலக அரங்கில் தேசமாக காலடி எடுத்து வைப்பது கடினம்" என சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

ஆனால், அதற்கு மாறாக ஆயுதப் போராட்டமின்றி, காந்தி இன, மத, மொழிகளால் வேறுபட்டிருந்த யாவரையும் 'ஜெய்ஹிந்த்' என்ற கோத்தில் வெள்ளையனுக்கு எதிராகத் திரட்டி, தேசங்களாக இருந்தவற்றை நாடாக்கி, இந்தியாவுக்கு மட்டுமல்ல, பாகிஸ்தானுக்கும் சுதந்திரம் கிடைக்க வழி வகுத்தார்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், அகில இந்திய காங்கிரஸிலிருந்து கொண்டே வெள்ளையனை வெளியேற்ற ஆயுதப் போராட்டம்தான் உகந்த வழி என அழுத்தங்கள் தந்து, காங்கிரஸின் தலைமைஒ பதவியை வென்றாலும், காந்தியவாதிகளால் அந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்படாதபடியால் அங்கிருந்து விலகி, ஜப்பான், ஜேர்மனி உதவியுடன் 'இந்திய இராணுவத்தை' தோற்றுவித்து, பிரித்தானியாவுக்கு அச்சத்தை ஏற்படுத்தினாலும் விரைவில் அகால மரணம் அடைந்தார்.

காங்கிரஸின் ஆட்சி இல்லாத இன்றைய இந்தியாவில் நேதாஜியின் பங்களிப்புக்கோ, சர்தார் வல்லபாய் பட்டேல் போன்றவர்களுக்கோ உரியய இடம் தரப்படவில்லை என அவர்கள் போன்றோர் மேலதிக கௌரவத்திற்குக் கொண்டுவரப்படுகிறார்கள்.

காந்தியின் ஆளுமை, நெல்சன் மண்டேலாவினது போல் இரண்டு நாடுகளுக்கும் சுதந்திரத்தை பெற்று கொடுக்க வழி காட்டியதோடு, அவரது ஆளுமைகளும் அர்ப்பணங்களும் தான் அவற்றைத் தேடித் தந்தன, கோசங்கள் மட்டுமல்ல.

அதுபோல ஸ்ரீலங்காவில் ஒடுக்கப்படும் மக்களும் தேசங்களும் தங்களுக்கு இடையில் இருக்கும் முரண்பாடுகளைக் களைந்து, சிங்களஒ பேரினவாதத்திற்கு எதிராக திரளுவதில்தான், அந்த ஒற்றுமையின் முதலீட்டில்தான், பேரினவாதம் தாங்கள்தான் இந்த நாடு, தங்களுடையதுதான் அதிகாரம் என்ற மனோபாவங்களிலிருந்து இறங்கி, ஸ்ரீலங்கா பன்முகத் தன்மை கொண்ட நாடு, ஒவ்வொருவருக்கும் பண்பாடு, கலாச்சார விழுமியங்கள் தனித்தனியாக உண்டு என்பதை ஏற்க வைக்கலாம். அதை விட்டு, பேரினவாதம் தருகின்ற பசைகளில், தேசங்களைச் சீரழித்து, அதனால் ஒற்றுமையை உருவாக்கிவிடலாம் என்பது பிளவுகளை மேலும் மேலும் வளர்த்ததாகவே மாறும். தமிழ் மக்களின் பெரும் தலைவர்கள் காலி முகத்திடலில் போராட்டம்



இந்திரா காந்தி

தொடங்கி, அடிகள் வாங்கி, பின் ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுத்து, பின்னாளில் அந்தப் போராட்டமும் கொடூரமாக அழிக்கப்பட்ட பின்பு, திரும்பவும் காந்திய வழியில் சாத்வீகப் போராட்டத்தை தொடர வேண்டுமென அறைகூவுகிறார்கள்.

தங்களது சொந்த இன மக்கள் தொடங்கி முன்னெடுத்த அறகலய சாத்வீகப் போராட்டத்தையே உன்மத்தமாக அடக்கி, அதனிலேயே அரசு செய்பவர்கள், தமிழ் மக்களின் தொடர்ந்த போராட்டங்களுக்கு அது சாத்தியமானாலும் அதன் நோக்குகளைஒ புரிந்து, விட்டுக் கொடுத்து, அரவணைத்துப் போவார்கள் என எதிர்பார்க்கலாமா? அதற்கு மேல் போராட்டங்களின் இலட்சியங்களிலேயே தெளிவற்ற நிலை. அடுத்து இவை தேர்தல் கால உத்திகளா என்ற சந்தேகங்கள். ஏனெனில் பொத்துவில் இருந்து பொலிகண்டி வரை எழுச்சி ஊர்வலம் நடத்திவிட்டு, இதுவரை காலமும் போராட்ட நெருக்கடிகள் தராமல் மௌனம் காட்டி, இப்பொழுது ஏன் இக்குரல்கள் எழுகின்றன – அதற்கு மேலான திட்டங்கள் எதுவும் தரப்படாமல் என்ற ஆதங்கங்கள் உண்டு.

### இந்தி(யா/ரா)விற்கான குழிபறிப்புக்கள்

காங்கிரஸ் பொறுப்பேற்ற இந்தியா, அதனது அரசமைப்புச் சட்டம் மதச்சார்பற்றது. ஆனால் நாடோ இந்துவாக ஆண்டவனில் நம்பிக்கை கொண்ட, சர்வ மதங்களும் வாழ்ந்த தனித்தன்மையுடனே இருந்தது. ராஜதந்திரிகள் இப்படியாக உருவாகும் இந்தியாவை பலவாறாக விமர்சித்தார்கள். மேலைத்தையே நாடுகள் அதனை விழிப்பாகவும் ஜாக்கிரதையுடனும் பார்த்தன. ஏனெனில் இந்தியா மேலைத்தேசங்களின் ஏகாதிபத்தியக் கொள்கைகளை ஏற்கவில்லை. அதற்கு மாறாக அவற்றை எதிர்த்து குரல் கொடுத்தது. அத்தோடு இந்தியாதான் மூன்றாம் மண்டல நாடுகளை (Third World) உருவாக்கியது என்ற எண்ணமும் இருந்தது.

ஆனால் மூன்றாம் மண்டல நாடுகளோ நேரு, இந்திரா காந்தியின் ஆளுமைகளால் இந்தியாவைச் சந்தேகக் கண் கொண்டு பார்த்தன. அண்டை நாடுகள் ஒரு பயப்ப பிராந்தியடனும், எந்த நேரமும் ஆக்கிரமிப்புக்குள்ளாகலாம் என்ற பீதியுடனும் அதன் அரசியல் தலைவர்கள் இருந்தனர். இந்தியாவின் அதிகார தோரணையை அத்தரப்புகள் விரும்பவில்லை. அதேசமயம் கம்யூனிஸ நாடுகளோ இந்தியா அகந்தைக் கொண்டது எனவும், ஆபத்துத் தரக்கூடிய எனவும் கருதினர். அவர்களது கம்யூனிஸ சித்தாந்தம் தங்களது முன்னேற்றத்திற்கு உதவாது என இந்தியா நிராகரித்தமை ஒரு காரணமாகலாம்.

அடுத்து, உறங்கிக் கிடந்த சீனாவின் கனவுகள்.


1971 காலங்களில் இந்திரா காந்தி பிரதமராக இருந்த பொழுது, இந்தியாவைப் பற்றி இருந்த இப்படியான முரண்பாடு கொண்ட சித்தாந்தங்களோடு அவர் போராட வேண்டி இருந்தது. காலிஸ்தான் கோரிக்கை பலமானதாகவும், கனடா, அமெரிக்காவில் வாழ்ந்த சீக்கியர்கள் அந்த அமைப்புக்கு ஆதரவு தந்து, அந்த நாடுகளின் அரசுகளுக்கும் அழுத்தம் தந்தது. இது, வட பிராந்தியத்தில் இந்திய ஒற்றுமையைக் குலைக்கக் கூடியதாகவும் வளரலாம் என்ற அபிப்பிராயங்கள் இந்தியாவில் மட்டுமல்ல, சர்வதேச மட்டங்களில் கூடப் பரவலாக இருந்தன. கிழக்கு பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு புகலிடம் தேடிய மில்லியன் கணக்கான வ்ங்காளி பேசும் மக்கள், அவர்களின் அவல நிலை, அதற்காக அவர் (இந்திரா காந்தி) முஸ்லிம் பாகிஸ்தான், கம்யூனிஸ்ட் சீனா, ஏகாதிபத்திய அமெரிக்கா எனப் பல தரப்புகளோடு மல்லுக்கட்ட வேண்டியிருந்தது.

இந்தியாவைச் சுற்றி இருந்த அண்டை நாடுகள் ஏதோ ஒரு வழியில் அமெரிக்காவின் நெருக்குதலில்



நேதாஜி

பாகிஸ்தானுக்கு போரில் ஆதரவு கொடுத்தன. ஸ்ரீலங்கா கூட பாகிஸ்தானது விமானங்கள் இடையில் கட்டுநாயக்காவில் தங்கி, எரிபொருளை நிரப்பி, தொடர்ந்து பயணம் செய்ய உதவின. அமெரிக்கா, மேற்கத்திய நாடுகள் மட்டுமல்ல, சீனா, சோவியத் ரஷ்யா கூட இந்தியா வங்காளதேசத்தை அமைத்



சர்தார் வல்லபாய் பட்டேல்

துக் கொடுத்தமையை கர்வம் கொண்ட எதேச்சாதிகார நடவடிக்கை என்றே பார்த்தன.

அத்தோடு, ஆணித்தரமாக காலிஸ்தான் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தி, அவர்களின் முதுகெலும்பை ஒடித்து, ஸ்ரீலங்கா பக்கம் திரும்பிய சமயம், துர்பாக்கியமாக காலிஸ்தான் பிரிவினைவாதிகளாலேயே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தமிழ்நாட்டிலும் துளிர்த்திருந்த 'திராவிட நாடு' கோரிக்கையால் இந்திராவின் நிர்வாகத்தினரும் கூட, தமிழீழம் ஏற்படுத்துவதை ஆதரிக்கவில்லை. அது திராவிட நாடு கோரிக்கைக்கு உந்து சக்தியாக அமையும் என அபிப்பிராயப்பட்டார்கள்.

இப்படியாக இந்தியாவின் மேலிருந்த பார்வைகளும், அதன் அரசியல் ஆளுமைகளும், இன்று பொருளாதார வளர்ச்சியினால் மாறியுள்ளன. அதனையே பிரதான நோக்கமாகக் கொண்டு, அசைக்க முடியாத வல்லரசாக பொருளாதார நிலையில் உலகில் நான்கு அல்லது ஐந்தாம் இடத்தில் நின்று கொண்டு, மூன்றாவது ஸ்தானத்துக்கு முன்னேற அது போட்டியிடுகின்றது.

மோடியினது அரசின் பார்வையில், இந்திரா காந்தியின் காலங்களில் இருந்த எதேச்சாதிகாரத்தை நீக்கி, அண்டை நாடுகளுக்கு முதலிடம் என்ற நட்பு பாதைகளில் வெளியுறவு கொள்கைகள் வளர்கின்றன. இந்தியாவை சூழ்ந்திருக்கும் நாடுகள் கூட அதனுடன் இணைந்த பொருளாதார வளர்ச்சிகளைத் திட்டமிடுகின்றன. அதற்குப் போட்டியாக சீனாவுடன் சேர்ந்து கடன் பொறிக்குள் சிக்குவதா என்ற சிந்தனைகள் வேறு.

இந்தியப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தைத் தக்க வைப்பதற்கும், சீனாவின் ஊடுருவல்களைக் கட்டுப்படுத்தவும் ஸ்ரீலங்கா, மாலத்தீவு போன்ற நாடுகளின் அனுசரனை அதற்குத் தேவையானதால் பல விட்டுக் கொடுப்புக்களை அது மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனைத் தமிழ் மக்கள் உணர்ந்து, பிராந்தியத்தின் நடப்புகளை கவனித்து, அனுசரணைகள் தேடி முன்னேற வேண்டும். இதை விட்டு, 'வெள்ளிச் செம்பில்தான் பால் குடிப்பேன், வெள்ளித் தட்டில்தான் நெய்ச்சோறே உண்பேன்' – என்று நின்றால் காத்திருக்க வேண்டியதாகிவிடும்.

(வளரும்....)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# இன்றைய நாடாளுமன்ற அமர்வை புறக்கணிக்கச் சஜித் கட்சி முடிவு

## - மனோ, ஹக்கீம், ரிஷாத் அணிகள் பங்கேற்பு

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத்தொடரை இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைக்கின்றார். அதேவேளை, ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையும் இடம்பெறும்.

இந்தநிலையில், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளைய நாடாளுமன்ற அமர்வைப் புறக்கணிப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப் பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தத் தகவலை வெளியிட்டார்.

அத்துடன், டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையும் குறித்த அமர்வை புறக்கணிக்கவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்தாலும் அதன் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன பங்கேற்கவுள்ளன.

## விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் பதவிவிலகுவதால் விமானசேவை நெருக்கடியில்!

விமான போக்குவரத்துக் கட்டுப் பாட்டாளர்கள் தொடர்ச்சியாகப் பதவி விலகுவதால் இலங்கை எதிர்காலத்தில் பாரிய நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் என விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு 138 விமான போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் தேவைப்பட்ட போதிலும் தற்போது 81 அதிகாரிகள் மாத்திரமே சேவையில் இருக்கின்றனர் என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் 4 அல்லது 5 உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து விலகிச் சென்றால், இந்த நாட்டில் விமானப் பயணம் பாரிய ஆபத்துக்கு உள்ளாகும் வாய்ப்புள்ளதாக சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்காலத்தில் எமக்கு சொந்தமான வான்வெளியை சர்வதேச சிவில் விமான சேவைகள் சங்கம் வேறு ஓர் அண்டை நாட்டுக்குக் கையளிக்கும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அவ்வாறான நிலையேற்பட்டால், இலங்கை பாரிய அந்நிய செலாவணி வருமானத்தை இழக்கும் அபாயம் உள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

## அரசாங்கத்தின் புதிய வரி விதிப்புக்களால் 500 வைத்தியர்கள் நாட்டைவிட்டு ஓட்டம்



அரசாங்கத்தின் வரி விதிப்பால் அண்மைய நாள்களில் சுமார் 500 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என தேசிய மக்கள் சக்தி யின் செயலாளரான வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறுபவர்களிடமிருந்து 6 சதவீதம் முதல் 36 சதவீதம் வரை வரி அறவிடப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வைத்தியர்கள் உட்பட ஏனைய தொழில் சார் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளி யேறுவதால் எதிர்காலத்தில் பாரிய சிக்கல் உருவாகும். வைத்தியர்கள் நாட்டுக்கு சேவை செய்யக்கூடிய சிறந்த திறமை படைத்த வர்கள். எனினும், அண்மைய நாள்களில் சுமார் 500 இற்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டை விட்டுச் சென்றுள் ளனர். வைத்தியத்துறையில், தொழிநுட் பத் துறையில் பணியாற்றுபவர்களும் நாட்டை விட்டுச் செல்ல முடிவெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.


**Northern Chamber of Industries**
**Vacancy announcement**
**Chief Executive Officer**

We are looking for someone young energetic who is committed, proactive and versatile leader for the Position of Chief Executive Officer will be

**Position Objectives**

♦ He/she has full responsibility for the implementation of the German Asia Pacific Business Association OAV funded project, to coordinate with the Micro small and medium Entrepreneurs of Northern Region while developing new initiatives and partnerships with other business and community organizations to achieve regional goals and objectives;

♦ Committed to work in the field, maintain awareness of the landscape of the Northern Region Competent in riding motorbike, having driving license.

**Requirements**

♦ Education: Degree in Bachelor of Business administration preferred.

♦ Experience minimum of 5 years' in executive management and leadership position within the nonprofit sectors (NGOs, UN Interagency) demonstrating progressively greater responsibility will be considered in lieu of academic credential

♦ Excellent communication and Human resource management skills

An attractive remuneration will be offered to the selected candidate. Please post your application and the CV with two non-related referees within Ten (10) days and state the post applied for in the top of the envelop left hand corner and post to the below address.

Dead line for the application is Feb 10th of 2023

**The Chairman**
**Northern Chamber of Industries**
**No 54, Clock Tower Lane**
**Jaffna**



**Northern Chamber of Industries**
**வடக்கிற்கான தொழிற் துறைகள் மன்றம்**
**வேலைவாய்ப்பு**
**அலுவலக உதவியாளர்**
**Vacancy**
**Office Assistant**

நிறுவனத்தினது நிருவாக உத்தியோகத்தர்களுடன் இணைந்து நிறுவனத்தின் தினசரி நிர்வாகச் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் ஒத்துழைக்கக்கூடிய திறமையான அலுவலக உதவியாளருக்கான பதவி நிலையை நிரப்புவதற்குரிய விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம்.

**தகைமைகள்**

♦ வயது எல்லை 20 – 35 வருடங்கள்

♦ GCE O/L சாதாரண பொதுத்தராதரம் வரையான கல்வி. GCE O/L தேர்ச்சி விசேட தகைமையாகக் கணிக்கப்படும்.

♦ ஆரம்ப நிலைக்கணனி அறிவு

♦ அடிப்படை அலுவலக உபகரணங்கள் தொலைத்தொடர்பு சாதனங்களை (telephone) இலத்திரனியல் உபகரணங்களை (computer printer, photo copier, scanner) கையாள்வதில் முன் அனுபவம்

♦ களவேலைகளில் (field work) ஈடுபாடு மோட்டார் வண்டி ஓட்டுந் திறன் அதற்கான லைசன்ஸ்.

பெப்ருவரி மாதம் 15 ந் திகதி பணி நிலையில் அமரும் வகையில் நேர்முகத் தேர்வு இடம் பெறும் பெப்ருவரி மாதம் 10 ந் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை வேலை வழங்கும் நிறுவனத்துடன் தொடர்பற்ற இரண்டு நடுவர்களுடைய பெயர் (non related Referees) அடங்கிய உங்களது சுயவபரக் கோவையையும் இணைத்து கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Chairman**
**Northern Chamber of Industries**
**No 54, Clock Tower Lane**
**Jaffna**

காலைக்கதிர் Kalaikkathir

# உடனடி, நிரந்த பிரச்சினைகளுக்கான தீர்வு முயற்சி சமாந்தரமாக வேண்டும்

## மட்டக்களப்பு பிரகடனத்தில் வலியுறுத்து

தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வு முயற்சிகளும் நிரந்தர அரசியல் தீர்வுக்கான முயற்சிகளும் சமாந்தரமாக முன்னெடுக்கப்படவேண்டும் என்று மட்டக்களப்பில் செவ்வாய்க்கிழமை வெளிப்படுத்தப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணியின் இறுதியில் அங்கு வெளிப்படுத்தப்பட்ட அறிக்கை இங்கு முழுமையாகத் தரப்படுகின்றது.

இன்று 2023 பெப்ரவரி 7ஆம் திகதி தமிழ் மாணவர்களும், மக்கள் சமூக அமைப்புக்களும், தமிழ் மக்களும் ஒன்றிணைந்து ஈழத் தமிழராகிய நாம் மரபுவழித் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமைக்கு உரித்துடைய ஒரு தேசிய இனம் என்பதை மீண்டும் உலகுக்குப் பிரகடனப்படுத்துகின்றோம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடு, பொங்குதமிழ் பிரகடனம் எனபவற்றினூடாக வரலாற்றில் தமிழ் மக்களின் அபிலாசைகள் கூட்டாகப் பலமுறை வெளிப்படுத்தப்பட்டபோதிலும், ஈழத் தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்காக, மீண்டும் ஒருதடவை எமது ஏகோபித்த வெளிப்படுத்தலை வலியுறுத்திக் கூறவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இன்று பேரெழுச்சியாக எமது தென் தாயகத்தின் மையப்பகுதியாகிய மட்டக்களப்பு நகரில் ஒன்று திரண்டுள்ளோம்.

தமிழ் மக்களுக்கான எந்தவொரு அரசியல் தீர்வும் எட்டப்பட முன் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி, தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் மக்கள் கூட்டாகப் பேரெழுச்சி கொண்டுள்ளனர். உலகெங்கிலும் உள்ள எமது உறவுகளின் ஆதரவுடன் இன்று தாயகத்தில் பெருமெழுச்சியாக திரண்டுள்ள மாணவர்களும், மக்களும், மக்கள் அமைப்புப் பிரதிநிதிகளுமாக முன்னெடுத்துள்ள இன்றைய பெரும் எழுச்சிப் பேரணி தமிழ் மக்களது ஏகோபித்த குரலின் தெளிவான வெளிப்பாடாகும்.

ஈழத் தமிழ் மக்கள் தொடர்பான எந்தவொரு அரசியல் நகர்விலும் தமிழர் தேசத்தின் பிரதிநிதிகள், சிங்கள தேசத்தின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் அனைவரும் பின்வரும் ஈழத் தமிழர் வரலாற்று உண்மைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

முன்னுரை:

இலங்கைத்தீவின் வரலாற்றில், தமிழர்களும் சிங்களவர்களும் தம்மை தாமே ஆளும் சுயாதீன இராச்சியங்களை கொண்டிருந்தனர். காலனித்துவ ஆட்சியாளர்களான போத்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர்கள் தங்களுடைய சுமார் 300 வருட ஆரம்ப ஆட்சிக் காலத்தில் சிங்கள இராச்சியங்களையும், தமிழ் இராச்சியங்களையும் தனித்தனியாக நிர்வகித்து வந்தனர்.

1833ஆம் ஆண்டு கோல்புரூக் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் தம்முடைய நிர்வாக நடைமுறையை இலகுபடுத்துவதற்காக சிங்கள இராச்சியங்களும், தமிழ் இராச்சியங்களும் பிரித்தானியர்களால் இணைக்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையை முதலில் சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட வரலாற்று நிகழ்வுகளை முற்றாகப் புறந்தள்ளி எண்ணிக்கைப் பெரும்பான்மை அடிப்படையில் முழுநாட்டினதும் அதிகாரங்கள் சிங்கள தேசத்திடம் கைமாற்றப்பட்டது. அதன் மூலம் தமிழர் தேசம் என்பது மழுங்கடிக்கப்பட்டு, தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுவதோடு, இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து அடுத்தடுத்து வந்த சிங்கள ஆட்சியாளர்கள் எப்பொழுதும் சிங்களவர்களுக்குக் கடும் தேசியவாதத்தை போசித்தும், ஊக்கப்படுத்தியும் வந்துள்ளதோடு தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு தமது இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதைக் கண்டும் உலகம் பாராமுகமாக இருந்து வருகிறது.

தமிழ் மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியான சுதந்திர தமிழீழ அரசை அமைப்பதற்காக 1976ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினால் நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு, 1977ஆம் ஆண்டுப் நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் வழங்கப்பட்ட மகத்தான மக்கள் ஆணையே, ஈழத் தமிழர்கள் ஜனநாயக முறையில் நடாத்தப்பட்ட ஒரு பொதுவாக்கெடுப்பில் தமது சுதந்தர வேட்கையை வெளிப்படுத்தியதற்குச் சான்று என்பதைப் பன்னாட்டு சமூகம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஒற்றையாட்சி அமைப்பைக் கொண்டு 1978ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசமைப்பானது தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாக அவர்களின் ஒப்புதல் இல்லாமலேயே நிறைவேற்றப்பட்டது என்பதை இந்தப் பிராந்தியத்தில் அக்கறையுள்ள அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

நான்கு தசாப்த காலமாக பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வன்முறையற்ற அமைதியான அரசியல் போராட்ட வழிமுறையூடாக வென்றெடுப்பதற்காக அடுத்தடுத்து வந்த சிங்கள ஆட்சியாளர்களோடு ஒத்துழைத்து, தங்களது ஆகக் குறைந்தபட்ச அரசியல் உரிமைகளைக்கூட பெற்றுக்கொள்வது சாத்தியமற்றது என்று நிரூபிக்கப்பட்டதோடு, எமது சாத்வீகப் போராட்டங்கள் ஆயுதமுனையில் அடக்கப்பட்ட காரணத்தாலேயே, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேறு வழிமுறைகள் இல்லாத சூழலில் தற்காப்புக்காக தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தோற்றம்பெற்றதோடு, தமிழர்களின் உரிமைக்கான கோரிக்கையாக சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு வலுப்பெற்றது என்பதை சம்மந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1985ஆம் ஆண்டு பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் ஆயுதப் போராட்ட அமைப்புகள் உள்ளடங்கலாக அனைத்துத் தமிழ் அரசியல் அமைப்புக்களும் ஏகமனதாக தங்களுடைய அடிப்படைக் கோரிக்கைகளாக தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் சுயநிர்ணய உரிமை என்பவற்றை முன்வைத்திருந்தமை கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

ஈழத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் வழியில் தீர்வு காண்பதற்குரிய நடைமுறைகளில் முன்னேற்றம் காணப்படாததன் விளைவாக, தமிழரின் ஆயுதப் போராட்டம் தொடர்ந்ததோடு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழரின் அரசியல் – இராணுவ பலமாக மேலெழுந்து அடுத்தடுத்து வந்த சிறிலங்கா ஆட்சியாளர்களுடன், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்களைச் செய்து கொண்ட போதிலும் சிங்கள ஆட்சியாளரின் நேர்மையற்ற அணுகுமுறைகளால் பேச்சு மூலம் தீர்வுகள் எதையும் எட்டப்பட முடியவில்லை என்ற கசப்பான உண்மை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

தமிழர்கள் மீதான திட்டமிட்ட இனப்படுகொலை, கடந்த 70 வருடங்களுக்கு மேலாக அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களின் துணையோடு, தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட, நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற கட்டமைக்கப்பட்ட படுகொலைகள் – 2009இல் மேற்கொள்ளப்பட்ட அதியுச்ச இனவழிப்புப் படுகொலைகள் உட்பட, மனிதப் படுகொலைகள், நிலங்களைக் கையகப்படுத்தல், பாலியல் வன்முறைகள், கலாசாரம் மற்றும் பொருளாதாரக் கட்டுமானங்களை அழித்தல் போன்ற வன்முறைகள் மூலம், தமிழ் மக்களுடைய தேசத்துக்கான தகுதிப்பாட்டைத் தாங்கிநிற்கும் அனைத்து விழுமியங்களும் அழித்தொழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை ஏற்றுக் கொண்டும்.

வடக்கு மாகாண சபையில் கடந்த 10.02.2015 அன்றும், பின்னர் 16.09.2015இல் தமிழக சட்டசபையிலும் நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானங்கள், அடுத்தடுத்து வந்த சிறிலங்கா ஆட்சியாளர்கள் நிகழ்த்திய இனப்படுகொலைகளை உலகுக்கு அம்பலப்படுத்தியிருந்ததையும் நாம் கூட்டாக மீண்டுமொரு தடவை அனைவரின் கவனத்திற்கும் உட்படுத்துகின்றோம்.

மேற்குறித்த யதார்த்த நிலைகளை கருத்தில் கொண்டு, தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக தமிழர்களை ஒரு தனித்த தேசமாக, அவர்களின் பாராதீனப்படுத்தப்பட முடியாத சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது மட்டுமே, மேலே குறிப்பிட்ட அனைத்து ஒடுக்குமுறைகளும் மீள நிகழாது இருப்பதை உறுதிசெய்யும் என்பதை வலியுறுத்தியும், தமிழர் தேசத்தின் வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் தங்களுடைய தனியான இறைமையை யாருக்கும் கையளித்திருக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய இந்தப் பேரெழுச்சியின் பிரகடனமானது, தேசிய இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வாக, சர்வதேச சட்டத்தின் ஆட்சித் தத்துவங்களுக்கு ஏற்புடையதாகவும், மனித உரிமைகள் எல்லா நபர்களுக்கும் சமத்துவமானது என்ற அடிப்படையிலும், சுயநிர்ணய உரிமையினை மதித்தும், அக்கறையுள்ள அனைத்து தரப்பினர்கள் முன்னிலையிலும் நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்குமாக முன்வைக்கப்படும் தீர்மானங்களைக் கவனத்தில் கொள்ளுமாறு இந்தப் பேரணி வலியுறுத்துகிறது.

அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையானது அரசமைப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன், பின்வரும் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில் இருந்து தொடங்கப்படவேண்டும்.

1. இந்த உடன்படிக்கையானது, ஏனைய விடயங்களிற்கும் மேலாக, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, அதன் இறைமை மற்றும் தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் வரலாற்றுத் தாயகம் அங்கீகரிக்கப்படுவதோடு, முதலில் தமிழர் தாயகத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்.

2. இந்த உடன்படிக்கையானது தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

3. இந்த உடன்படிக்கை ஒருதலைப்பட்சமாக ரத்து செய்யப்பட்டால், சர்வதேச மற்றும் ஐக்கிய நாடுகள் அவையின் ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு என்பவற்றோடு, தமிழ் மக்கள் ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் தமது அரசியல் எதிர்காலத்தை தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற ஏற்பாடு இவ் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும்.

4. இந்த உடன்படிகை மூன்றாம் தரப்பான சர்வதேச தரப்பினரின் முன்னிலையில் எழுதப்படவேண்டும்.

பேச்சுவார்த்தையின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்:

1. தொடர்ச்சியாக, திட்டமிட்ட இனப்படுகொலைக்கு உள்ளாகி வரும் தேசம் என்ற வகையில், தமிழ் மக்கள் தமது அடையாளத்தை பாதுகாக்க தொடர்ந்து போராடி வருகின்றனர்.

2. தமிழ் மக்கள் இனவழிப்பிற்கு முகங்கொடுத்து வரும் நிலையில், தமிழர்களின் தேசிய அடையாளத்தின் பாதுகாப்பு மற்றும் ஒரு தேசமாக இருத்தல் என்பவை சமரசத்திற்கு அப்பாற்பட்டதாகவும், உறுதியான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

3. முதலில், இரு தரப்பும் கூட்டாக பேச்சுவார்த்தை செய்வதற்கான தெளிவான வழிவரைபடத்தை சர்வதேச மத்தியஸ்தத்துடன் தயார் செய்ய வேண்டும். இது தெளிவான அடைவுகளையும் அதன் கால அட்டவணைகளையும் கொண்டிருக்க வேண்டும்.

4. பேச்சுவார்த்தைகள் இரண்டு தளங்களில் சமாந்தரமாக நடாத்தப்பட வேண்டும் ஒன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவது மற்றையது இறுதி அரசியல் தீர்வை நோக்கியதாக இருக்கவேண்டும்.

5. உடனடிப் பிரச்சினைகள் குறித்துப் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

5.1. தொல்பொருள் ஆராய்ச்சி, வன ஜீவராசிகள் திணைக்களம், வனவள பாதுகாப்புத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தித் திட்டம் எனும் போர்வையில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான நில அபகரிப்புத் திட்டங்களும் நிறுத்தப்படுவதோடு அபகரிக்கப்பட்ட காணிகளை உடனடியாக உரியவர்களிடம் மீள ஒப்புடைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

5.2. தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அனைத்து சிங்களக் குடியேற்றங்களும் அகற்றப்பட வேண்டும்.

5.3. அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டும். 5.4. உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை மாற்றங்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

5.5. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான சர்வதேச விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன், அவர்களுக்கு சர்வதேச நீதி வழங்கப்படுவதோடு குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

5.6. பயங்கரவாதத் தடைச் சட்டம் உடனடியாகவும் நிரந்தரமாகவும் நீக்கப்படவேண்டும்.

5.7. மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதும், திட்டமிட்ட இன அடக்குமுறைக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் மாணவர்கள் மற்றும் மக்கள் சமூகச் செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுதல் மற்றும் கைதுசெய்யப்படுதல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

5.8. தமிழ் மக்களின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்படுத்தும் அனைத்து வகையான அச்சுறுத்தல்களையும், தடைகளையும் நிறுத்தவேண்டும்.

5.9. காலகாலமாக நடைபெற்று வரும் தமிழின அழிப்பிற்கு சர்வதேச நீதிப் பொறிமுறை (சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் – ICC, சர்வதேச நீதிமன்றம் – ICJ) ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிகார நீதி வழங்கப்படவேண்டும். அத்துடன் ஐக்கிய நாடுகள் அவையால் விசேடமாக உருவாக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் விசாரணைப் பொறிமுறைகளும் அனுமதிக்கப்படவேண்டும்.

5.9.0. இறுதி அரசியல் தீர்வொன்று எட்டப்படும் வரை தமிழ் மக்கள் தமது தாயகத்தின் அன்றாட விவகாரங்களை நடாத்துவதற்கு இடைக்காலநிர்வாகப்பொறிமுறையொன்று உருவாக்கப்படவேண்டும்.

6. இறுதி அரசியல் தீர்வைக் காண்பதற்கு பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

## இனப்பிரச்சினை .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடன்படிகை மூன்றாம் தரப்பான சர்வதேச தரப்பினரின் முன்னிலையில் எழுதப்படவேண்டும்.

தமிழ் மக்கள் இனவழிப்பிற்கு முகங்கொடுத்து வரும் நிலையில், தமிழர்களின்தேசிய அடையாளத்தின் பாதுகாப்பு மற்றும் ஒரு தேசமாக இருத்தல் என்பவை சமரசத்திற்கு அப்பாற்பட்டதாகவும், உறுதியான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

முதலில், இரு தரப்பும் கூட்டாக பேச்சுவார்த்தை செய்வதற்கான தெளிவான வழிவரைபடத்தை சர்வதேச மத்தியஸ்தத்துடன் தயார் செய்ய வேண்டும். இது தெளிவான அடைவுகளையும் அதன் கால அட்டவணைகளையும் கொண்டிருக்கவேண்டும்.

பேச்சுவார்த்தைகள் இரண்டு தளங்களில் சமாந்தரமாக நடாத்தப்பட வேண்டும் ஒன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவது மற்றையது இறுதி அரசியல் தீர்வை நோக்கியதாக இருக்க வேண்டும்.

தொல்பொருள் ஆராய்ச்சி, வன ஜீவராசிகள் திணைக்களம், வனவள பாதுகாப்புத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தித் திட்டம் எனும் போர்வையில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான நில அபகரிப்புத் திட்டங்களும் நிறுத்தப்படுவதோடு அபகரிக்கப்பட்ட காணிகளை உடனடியாக உரியவர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அனைத்து சிங்களக் குடியேற்றங்களும் அகற்றப்பட வேண்டும்.

அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டும்.

உள்ளூராட்சிமன்றங்களின்எல்லை மாற்றங்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான சர்வதேச விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன், அவர்களுக்கு சர்வதேச நீதி வழங்கப்படுவதோடு குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாகவும் நிரந்தரமாகவும் நீக்கப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதும், திட்டமிட்ட இன அடக்குமுறைக்கு எதிராகப்போராட்டங்களை முன்னெடுத்து வரும் மாணவர்கள் மற்றும் மக்கள் சமூகச்செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுதல் மற்றும் கைதுசெய்யப்படுதல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

தமிழ் மக்களின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்படுத்தும் அனைத்து வகையான அச்சுறுத்தல்களையும், தடைகளையும் நிறுத்தவேண்டும்.

காலகாலமாக நடைபெற்று வரும் தமிழின அழிப்பிற்கு சர்வதேச நீதிப் பொறிமுறை (சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் – ICC, சர்வதேச நீதிமன்றம் – ICJ) ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிகார நீதி வழங்கப்படவேண்டும். அத்துடன் ஐக்கிய நாடுகள் அவையால் விசேடமாக உருவாக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் விசாரணைப் பொறிமுறைகளும் அனுமதிக்கப்பட வேண்டும்.

இறுதி அரசியல் தீர்வொன்று எட்டப்படும்வரை தமிழ் மக்கள் தமது தாயகத்தின் அன்றாட விவகாரங்களை நடாத்துவதற்கு இடைக்கால நிர்வாகப் பொறிமுறையொன்று உருவாக்கப்படவேண்டும்.

இலங்கை அரசின் அரசமைப்பின் அடிப்படையாகிய ஒற்றையாட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும்

வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடுகள், பொங்கு தமிழ் பிரகடனம் ஆகிய வரலாற்றுப் பதிவுகள் ஊடாக தமிழ் மக்களால் முன் வைக்கப்பட்ட, அதி முக்கிய அடிப்படைக் கோட்பாடுகளை மையப்படுத்தி, தமிழ் மக்களின் வேணவாவைப் பூர்த்தி செய்யும் தீர்வை இலக்காகக் கொள்ள வேண்டும்.

பேச்சுக்களின்போது சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகள் (பலதுறை நிபுணர்கள் குழு) சேர்க்கப்பட வேண்டும். அத்துடன் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய புலம்பெயர் தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் உள்வாங்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைச் சூழல் ஏற்படும்பட்சத்தில், அது சர்வதேச மத்தியஸ்தத்துடனும், வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புணர்வுடனும் செயற்படவேண்டும்.

இந்தப் பேச்சுக்களின் போது இஸ்லாமியத் தமிழ் மக்கள், மலையகத் தமிழ் மக்கள் ஆகியோரின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்.

முன்னைய பேச்சுகளைப் போல் அல்லாமல் நடுநிலையுடனும், நேர்மையுடனும் நடுவராகச் செயற்படுமாறு சர்வதேச சமூகத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலே கூறப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறையில் திருப்திகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை ஆராய்ந்து உறுதிப்படுத்திய பின்னரே, எந்தவொரு நிதி வழங்கும் நாடுகளும் மற்றும் நிறுவனங்களும் சிறிலங்காவிற்கு பொருளாதார உதவி வழங்கத் தொடங்க வேண்டும் என நாம் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறோம் – என்று தெரிவிக்கப்பட்டது. (முழுமையான பிரகடனம் 09ஆம் பக்கத்தில்)

## அரசின் புதிய வரிகளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் சுகாதார தொழிற்சங்கங்கள், அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம், பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகள் சங்கம் மற்றும் பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள் சங்கம் ஆகியன அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன. அதேநேரம், நாட்டிலுள்ள அனைத்து வங்கிகளின் பணியாளர்களும் மதியத்துடன் வங்கிச் சேவைகளை நிறுத்தி வரி வசூலிப்புக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாளை 24 மணி நேர அடையாளப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது. அனைத்து மருத்துவமனைகளிலும் காலை 8 மணிக்கு இந்த அடையாள வேலைநிறுத்தம் நடைபெறவுள்ளது. எனினும், சிறுவர் மருத்துவமனைகள், மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் புற்றுநோய் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட அத்தியாவசிய மருத்துவ சேவைகள் தடையின்றி தொடரும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. வரி திருத்தத்தை அரசு திரும்பப் பெறக் கோரி பல சுகாதார தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன.

இதேநேரம், அனைத்துப்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனமும் கடந்த 5 ஆம் திகதி விடுத்த அறிவித்தலின் பிரகாரம் நாளை இன்று முழு நாளும் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளது. பல்கலைக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகள் சங்கமும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

அத்துடன், நாளை சுகயின விடுமுறை தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதென பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள் சங்கமும் அறிவித்துள்ளது. நிர்வாகக் குழு கூட்டத்தில் தீர்மானத்தின் படி இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள் சங்கம் தெரிவித்தது.

இந்தப் போராட்டங்களுடன், வங்கி ஊழியர்களும் நாளை அரைநாள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். அதனால் வங்கி சேவைகள் நண்பகலுடன் இடைநிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'தில்' இருந்தால் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் நடத்தப் பணம் இல்லை என்றால் அரசு தனது செலவைக் குறைக்க முடியும். மக்கள் இப்போது அனுபவிக்கும் துன்பத்துக்கு மக்கள் காரணமல்ல. அரசின் ஊழல், மோசடிகளே காரணம்.

இந்த நிலையில் நாம் தேர்தலைக் கேட்பது கிராமங்களில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத்தான். சிறு சிறு தொழில்களை அபிவிருத்தி செய்ய முடியும். அதனூடாக அந்த மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப முடியும்.

நாட்டை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை கிராமங்களில் இருந்து தொடங்கவேண்டும். அதற்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேண்டும். கிராமங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

பொருளாதாரத்தை நாசமாக்கியவர்களைப் பழிவாங்குவதற்காக இந்தத் தேர்தலைப் பயன்படுத்தவேண்டும் என்று நான் சொல்லவில்லை. கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காகவே இதைப் பயன்படுத்தவேண்டும் என்றே சொல்கின்றேன்.

நல்லவர்களை வேட்பாளர்களாகக் களமிறக்க வேண்டும். கடந்த வருடம் மே மாதம் 9ஆம் திகதி கலவரத்தின் போது ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை எரித்தவர்கள் பலர் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக உள்ளார்கள் என்று அரச உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அது பொய்.

வீடுகள் எரிவதைப் பார்த்துக்கொண்டு நின்றவர்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்கள். எம் மீது இருக்கின்ற கோபம் காரணமாக எமது ஆதரவாளர்களும் தீ வைத்தார்கள் என்று அரச தரப்பினர் பொலிஸிடம் கூறினர். அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தீ வைத்தார்கள் என்று நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டவர்கள் எவரும் எங்களது வேட்பாளர் பட்டியலில் இல்லை – என்றார்.

## தேர்தலுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால்தான் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு முயற்சி செய்கின்றது.

தேர்தலை ஒத்திப்போடுவதற்குப் பல்வேறு வழிகளிலும் அரசு முயற்சி செய்து வருகின்றது. அரசு என்னதான் முயற்சி செய்தாலும் சட்டத்தின்படி தேர்தலை ஒத்திப்போட முடியாது.

தேர்தலை ஒத்திப்போட்டால் மக்கள் சும்மா பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார்கள்.

பொருளாதார பிரச்சினையால் தேர்தலை நடத்த முடியாது என்று கூறினால் அந்தப் பிரச்சினைக்குக் காரணம் இந்த அரசுதானே. அப்படியென்றால் தேர்தல் மூலம் ஆட்சியை மாற்றுவதன் மூலம்தான் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

பொருளாதாரப் பிரச்சினையை ஏற்படுத்தியவர்களால் ஒருபோதும் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ரணில் ஜனாதிபதியாகி ஏதாவது பிரச்சினை தீர்ந்திருக்கின்றதா? பிரச்சினை கூடித்தான் இருக்கின்றது.

உலகின் ஒவ்வொரு நாடுகளும் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடையும் போது அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தித்தான் வீழ்ந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி இருக்கின்றன.

1979 இல் கொரியாவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்தின் ஊடாக அது சரி செய்யப்பட்டது.

எதியோப்பியா – செம்பியா போன்ற நாடுகளிலும் அதே நிலைதான். ஆட்சி மாற்றத்தின் ஊடாகவே சரி செய்யப்பட்டது.

1991இல் இந்தியாவில் நடந்ததும் அப்படித்தான். இலங்கையைவிட மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது அந்நாடு. புதிய பிரதமர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்தியா தப்பியது.

தேர்தலுக்கு யாரும் இடையூறு செய்ய முடியாது. அப்படிச் செய்தால் அரசமைப்பின் 104 ஆம் சரத்தின்படி மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை வழங்க முடியும்.

இந்த வருடம் 11 பில்லியன் ரூபாவைத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குவதற்காக நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. நிதி அதிகாரம் இருப்பது நாடாளுமன்றிடம்.

அந்த நிதியை தேர்தல் ஆணைக் குழுவுக்கு வழங்குவது நிதி அமைச்சின் செயலாளரின் கடமை. அதை அவரால் மீற முடியாது.

அவர் வழங்காமல் இருந்தால் தேர்தலுக்குத் தடை ஏற்படுத்துகின்றார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதாகுவார்.

அப்படியென்றால் அவருக்கு எதிராக அரசமைப்பின் 104 சரத்தின்படி வழக்குத் தாக்கல் செய்ய முடியும். அவருக்கு மூன்று வருட தண்டனை வழங்க முடியும்.

அடுத்த வழக்கு விசாரணையில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நிதியை வழங்குமாறு நீதிமன்றம் அவருக்கு உத்தரவிடும் என்று நாம் நம்புகின்றோம்.

அதேபோல் உள்விவகார அமைச்சின் செயலாளர் கட்டுப்பணத்தை ஏற்க வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு எழுதிய கடிதம் தொடர்பிலும் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

அவரும் தேர்தலுக்குத் தடை ஏற்படும்வகையில்தான் செயற்பட்டுள்ளார். அவருக்கும் மூன்று வருட சிறை தண்டனை வழங்க முடியும் – என்றார்.

## வழக்கு விசாரணை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நாளை மறுதினம் வரையில் ஒத்தி வைக்கப்பட்டது.

மார்ச் மாதம் 9 அன்று இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகளிற்கான வேட்புமனுத் தாக்கலின்போது முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துரைப்பற்று பிரதேச சபையின் தமிழ் அரசுக் கட்சியினது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தமிழ் அரசுக் கட்சி சார்பில் உச்ச நீதிமன்றில் றிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

கரைத்துரைப்பற்றில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவை நிராகரிக்க மேற்கொண்ட தீர்மானத்தை இரத்து செய்து வேட்பு மனுவை ஏற்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உத்தரவிடக்கோரி தமிழ் அரசுக் கட்சியின் பதில் செயலாளர் மருந்துவர் ப.சத்தியலிங்கம், மருத்துவர் சிவமோகன் மற்றும் ஜெயசீலன் ஜெயாசன் ஆகியோர் சார்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று மன்றில் நீதியரசர்களான பிரியந்த ஜெயவர்த்தன,

(11ஆம் பக்கம் பார்க்க)

## வழக்கு விசாரணை .......

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

குமுதினி விக்கிரமசிங்க, அச்சல வெங்கப்புலி ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிர் மனுதாரர்கள் சார்பில் தேர்தல்கள் ஆணைக் குழுசமர்ப்பிக்குமாறுமன்றுகட்டளையிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

தேர்தல்கள் ஆணைக்குழுவினதும், தெரிவத்தாட்சி அலுவலரதும் அறிக்கைகள் புதன்கிழமை கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கட்டளையிட்ட மன்று வழக்கு விசாரணையை 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

## 13ஐ அமுலாக்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், அவர் தலைமையிலான அரசையும் மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன். ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்காகவே 69 இலட்சம் பேர் வாக்களித்தனர் என்பதை மொட்டுக்கட்சியினர்மறந்துவிடக்கூடாது. எனவே,13 ஐ அமுல்படுத்த முற்பட்டால் அதற்கு எதிராக மாபெரும் போராட்டம் வெடிக்கும் – என்றார்.

## 30 ஆவது தடவையாக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தை ஒத்திப்போடுவதற்கு அல்லது கொள்கை விளக்க உரையை நிகழ்த்துவதற்கே செல்வார்கள்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க அதில் இருந்து வித்தியாசப்படுகின்றார்.அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றது

முதல் கடந்த மாதம் வரை 29 தடவைகள் நாடாளுமன்றம் சென்றுள்ளார். அதாவது, கடந்த வருடம் ஜூலை 20 முதல் இந்த வருடம் ஜனவரி 18 வரை 29 தடவைகள் அவர் நாடாளுமன்றம் சென்றுள்ளார்.

இந்நிலையில், 30 ஆவது தடவையாக இன்று சபைக்குச் செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத்தொடரை தொடக்கி வைக்கின்றார். அதேவேளை, கொள்கை விளக்க உரையையும் ஆற்றுவார்.

## ஆட்சியை நடத்தும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நாம் ஒத்திப்போடுவதாகக் கூறவில்லை. எதிர்க்கட்சிகள்தான் அப்படி நாம் செய்யப்போவதாகக் கூறித் திரிகின்றன.

இந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்று கூறுபவர்கள் நிச்சயமாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று விரும்பாதவர்கள். அவர்களால் வெல்ல முடியாது. தோல்விப் பயம் காரணமாகவே அவர்கள் உளறுகின்றார்கள்.

அவர்கள்தான் ஆட்சியைக் கைப்பற்றும் – ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றும் ஆசையுடன் இருப்பவர்கள்.

முடிந்தால் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 50.1வீத வாக்குகளை எடுத்துக் காட்டட்டும் என்று சவால் விடுக்கின்றேன் – என்றார்.

## ரணில் - 'மொட்டு' .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 'மொட்டு' ஆட்சி தொடர்ந்தால் வறியோர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கும். பெருமளவு மக்கள் பட்டினியால் செத்து மடியும் அவல நிலையும் ஏற்படும்.

– இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

கெஸ்பேவ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டின் துறைமுகங்கள் மற்றும் வங்கிகளை ஒரு சிறிய உத்தரவு மூலம் மூடிய, இறந்த உடலை முழங்கால்களுக்கு மேல் தூக்குவதைத் தடை செய்த, இரவில் விளக்குகள் ஏற்றுவதைக் கூட தடை செய்த 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளின் பலிக்கடாக்கள் நாட்டைக் கட்டியெழுப்பத் தீர்வுகளை வழங்குவோம் என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு இந்த நாட்களில் செயற்படுகின்றனர்.

2005 இல் இந்த நாட்டை அழித்த சுனாமி நிதி மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்சவுக்கு அதிகாரம் வழங்க ஏற்பாடு செய்தவர்கள் குறித்த தரப்பினரே.

1988 மற்றும் 1989 இல் நாடு முழுவதும் இரண்டு கிளர்ச்சிகள் நடந்த போதும்கூட ரணசிங்க பிரேமதாஸ ஒருபோதும் பொருளாதாரத்தைச் சுருக்குவதற்கு முயற்சிக்கவில்லை. ஒரு தீர்மானத்தை எட்டியதுடன் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி ஆடைத் தொழிற்சாலைத் திட்டம் போன்ற பல அபிவிருத்தித் திட்டங்களையும் அவர் ஆரம்பித்தார். எல்லா சந்தர்ப்பங்களிலும் மக்கள் பக்கம் சிந்தித்தே அவர் செயற்பட்டார்.

ஆனால், தற்போது நம் நாடு கடனைச் செலுத்தாத நாடாக, அரசே பிரகடனப்படுத்தியவாறு வறிய நாடாக மாறியுள்ளது. இவ்வாறான நிலையில் இப்பிரச்சினையில் இருந்து விடுபட பொருளாதாரம் விரிவாக்கல் செய்யப்பட வேண்டுமா? அல்லது பொருளாதாரம் சுருக்கப்பட வேண்டுமா? என்பதைச் சிந்திக்க வேண்டும்.

தற்போதைய அரசு பொருளாதார வீழ்ச்சிக்கான செயற்பாடுகளையே செய்கின்றது. சந்தைத் தேவையைக் குறைத்து மக்களிடையே புழங்கும் பணத்தைக் குறைத்து, நாட்டில் பணவீக்கத்தைக் குறைத்து, அதன் மூலம் நிலுவை விகிதத்தை வலுப்படுத்த நினைத்தாலும், இதனால் மக்கள் மீது பெரும் வரிச்சுமையே சுமத்தப்படும்.

எதிர்காலத்தில் 45 ஆயிரம் ரூபா வருமானம் ஈட்டுபவர்களுக்கும் வரி விதிக்கப்படும் என ஒரு கதை பரவி வருகின்றது. இதன் காரணமாக, ஏராளமான புத்திஜீவிகள், நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். வரிச் சுமையே இதற்குக் காரணம்.

நாட்டில் பெருமளவில் மூளைசாலிகள் வெளியேற்றம் ஏற்பட்டுள்ள நேரத்தில் சமூகத்தின் பல பிரிவினர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். விரைவில் மின் கட்டணம் 65 – 75 சதவீதம் என இரு மடங்காக உயரும் என்பதால் நாட்டில் பிரச்சினைகள் மேலும் மோசமாகும். இதனால்வறியோர்களின்எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கும்.

இந்நேரத்தில் நாம் ஒரு நிலைப்பாட்டில் இருந்து கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். பொருளாதாரத்தைச் சுருக்காமல் விரிவாக்கல் செய்ய வேண்டும் என்பதுவே அந்த நிலைப்பாடாக அமையவேண்டும். இதன் ஊடாக மக்களைக் கட்டியெழுப்பல் இடம்பெறவேண்டும். அரசின் இந்த நடவடிக்கையால் பல சிறிய மற்றும் நடுத்தர வணிகர்கள் வீழ்ச்சி கண்டுள்ளனர் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622

# கிளிநொச்சி விபத்தில் நேற்று ஒருவர் இறப்பு

கிளிநொச்சியில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 35 வயதான 2 பிள்ளைகளின் தந்தையே பரிதாபகரமாக இப்படி உயிரிழந்தார்.

கிளிநொச்சிபொலிஸ்பிரிவிற்குட்பட்ட பரந்தன் – பூநகரி வீதியின் ஓவசியர் கடைச் சந்தியடியில் பிற்பகல் 4.30 மணியளவில் விபத்து இடம் பெற்றது. கிளிநொச்சியிலிருந்து பூநகரி நோக்கி பயணித்த கப் ரக வாகனமும் கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து ஏற்பட்டது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவரான கனகரத்தினம் றீகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பெரும்போக அறுவடைக் காலம் என்பதால் அறுவடை செய்யப்பட்ட நெல்லை வீதியின் அரைவாசிப் பகுதியில் காயவிட்டுள்ளனர் விவசாயிகள். இவ்வாறு நெல் உலர விடப்பட்ட இடத்தையொட்டியே விபத்து இடம்பெற்றது என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்

## உடனடி, நிரந்த பிரச்சினைகளுக்கான .......

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

6.1. இலங்கை அரசின் அரசமைப்பின் அடிப்படையாகிய ஒற்றையாட்சி முறை ஒழிக்கப்படவேண்டும்

6.2. இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பம் முதலே ஆக்கப்பூர்வமாக நடாத்தப்பட வேண்டுமாயின் வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடுகள், பொங்கு தமிழ் பிரகடனம் ஆகிய வரலாற்றுப் பதிவுகள் ஊடாக தமிழ் மக்களால் முன் வைக்கப்பட்ட, அதி முக்கிய அடிப்படைக் கோட்பாடுகளை மையப்படுத்தி, தமிழ் மக்களின் வேணவாவைப் பூர்த்தி செய்யும் தீர்வை இலக்காகக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் அடிப்படைக் கோட்பாடுகள் ஆவன: 1) தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதை அங்கீகரித்தல். 2) தமிழ் மக்களினுடையதாக அடையாளம் காணப்பட்ட, வரலாற்று ரீதியான மற்றும் பாரம்பரியமான தாயகப் பிரதேசத்தை அங்கீகரித்தல். 3) மேற்குறிப்பிட்ட உரித்துடைமையின் அடிப்படையில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்.

6.3. பேச்சுக்களின்போது சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகள் (பலதுறை நிபுணர்கள் குழு) சேர்க்கப்பட வேண்டும். அத்துடன் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய புலம்பெயர் தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் உள்வாங்கப்பட வேண்டும்.

6.4. தமிழ் மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைச் சூழல் ஏற்படும்பட்சத்தில், அது சர்வதேச மத்தியஸ்தத்துடனும், வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும்.

6.5. இந்தப் பேச்சுக்களின் போது இஸ்லாமியத் தமிழ் மக்கள், மலையகத் தமிழ் மக்கள் ஆகியோரின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்.

6.6. முன்னைய பேச்சுகளைப் போல் அல்லாமல் நடுநிலையுடனும், நேர்மையுடனும் நடுவராகச் செயற்படுமாறு சர்வதேச சமூகத்தைக் கேட்டுக் கொள்கிறோம். மேலே கூறப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறையில் திருப்திகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை ஆராய்ந்து உறுதிப்படுத்திய பின்னரே, எந்தவொரு நிதி வழங்கும் நாடுகளும் மற்றும் நிறுவனங்களும் சிறிலங்காவிற்கு பொருளாதார உதவி வழங்கத் தொடங்கவேண்டும் என நாம் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இறுதித் தீர்வை எட்டுவது என்பது, வன்முறைச் சுழற்சிகள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கும், இலங்கையில் நிலையான அமைதியை அடைவதற்கும், இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் நிலையான அமைதியை நிலைநாட்டுவதற்கும் முக்கியமாக உள்ளதென்பதை இப்பிராந்தியத்தை அக்கறையோடு கையாளும் நாடுகள் உணர்ந்து செயற்படவேண்டும்.

ஈழத் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் மரபுவழித் தாயகம், தமிழ் தேசியம், தன்னாட்சியுரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வும், சர்வதேசத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம், தமிழ் மக்களின் ஆணை பெறப்படவேண்டும் என்பதே எமது உறுதியானதும் அறுதியானதுமான நிலைப்பாடாகும்.

அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து, எம்மை நாமே ஆளக் கூடிய நிரந்தரத் தீர்வும் பொதுவாக்கெடுப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை, தமிழ் மக்கள் சார்பாக இந்தப் பிரகடனம் உலகுக்கு அறிவிக்கின்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.02.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 24 செவ்வாய்க்கிழமை 16.01.2023 கதிர் 343

# யாழ்ப்பாண வாசி தமிழ்நாட்டில் கைது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொண்டமானாறு பகுதியை சேர்ந்த மாணிக் கவாசகம் மோகனராஜா (வயது 42) என்பவரே கைது செய்யப்பட்டுள் ளார் என்று பொலிஸார் 2

# இலங்கை ஆதிவாசிகள் தனிக் கட்சி தொடக்கம்

## விரைவில் பதிவு செய்யப்படும் என்கிறார் தலைவர்

இலங்கையின் ஆதிவாசிகள் தமது உரிமை களை நிலைநாட்டுவதற்காக தனி அரசியல் கட்சி ஒன்றைத் தொடங்கப் போகிறார்கள் என்று அறிவித்துள்ளனர்.

ஆதிவாசிகளின் அடையாளத்தை உறுதிப்படுத்த தனியான அரசியல் கட்சி பதிவு செய்யப்படும் என ஆதிவாசிகளின் தலைவர் உருவரிகே வன்னில எத்தோ தெரிவித்தார்.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பல பிரதேசங்களில் சுயேச்சைக் குழுவாகத் தமது சமூகத்தினர் போட்டி யிடுகின்றனர் என்றும் அவர் 2

# கிழக்கு நோக்கிப் புறப்பட்ட பேரணி மட்டக்களப்பைச் சென்று சேர்ந்தது

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி தொடங்கிய பேரணி அதன் இறுதி நாளான இன்று மட்டக்க ளப்பைச் சென்றடைந்தது. வெருகலில் இருந்து காலையில் புறப்பட்ட பேரணி திருமலை – மட்டக் களப்பு இடையில் உள்ள முக்கிய நகரங்கள் ஊடாக மட்டக்களப்பைச் சென்றடைந்தது.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து சனிக்கிழமை தொடங்கிய இந்தப் பேரணி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஊடாக தனது இறுதி இலக் 2




# 13 இற்கும் மேலதிகமாக தமிழருக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்!

## யாழில் பௌத்த பிக்குகள் கூட்டாக வலியுறுத்து

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு மேலதி கமாகத் தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று பௌத்த பிக்குகள் கூட்டாக வலி யுறுத்தினர்.

தென்பகுதியில் உள்ள பௌத்த பிக்குகள் அடங்கிய சர்வமதக் குழுவினர் யாழ்ப் பாணத்துக்கு விஜயம் மேற் கொண்டு வடபகுதியில் உள்ள சர்வமதத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையா டினர். கலந்துரையாடலுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே 2



# 18 இலங்கையர்களுடன் மொறீஸியஸில் படகு



இலங்கையர்கள் 18 பேர் பயணம் செய்த இலங்கைப் படகு ஒன்று கடந்த வெள்ளியன்று மொறீஸியஸ் கடற்பரப்பினுள் பிரவேசித்து உதவி கோரியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தப் படகில் மூன்று குழந்தைகளும் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மொறீஸியஸ் தீவைச் சுற்றிய கடலில் இந்தப் படகை வழிமறித்த அந்த நாட்டின் கடலோரக் காவல் படை 2

# 13ஐ அமுல்படுத்த எதிர்ப்பு ஓட்டமாவடியில் போராட்டம்

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்த வேண்டாம் என்றும் அவர்கள் வலியுறுத்தி மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடியில் இன்று சிலர் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் அரச பயங்கரவாதத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

எக்ஸத் ஊடக வலையமைப்பு ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டம் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரின் பங்களிப்புடன் வாழைச் சேனை பொலிஸ் நிலைய சந்தியில் இருந்து தொடங்கி மட்டக்களப்பு – கொழும்பு வீதி ஊடாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தை அடைந்தது. அங்கு ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு முகவரியிடப்பட்ட மனுவினை பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் யூ.எல். அப்துல் ஹமீட்டிடம் பேரணியில் சென்றவர்கள் கைய ளித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக நடக்கும் அரச பயங்கரவாதத்தினை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தினர். மாவட்டத்தில் உள்ள முஸ்லீம் மக்களுக்கு 2

# நுவரெலியாவில் மனோ அணியை சந்தித்த அமெரிக்கத் தூதுவர் குழு

மலையகம் பற்றிய உலக அவதானத்தை முன்னெடுக்கும் நோக்கில், மனோ கணேசன் எம்.பி. தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி குழுவினரை, நுவரெலியாவுக்குப் பயணம் செய்துள்ள அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தலைமையிலான குழுவினர் இன்று சந்தித்துள்ளனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி குழுவில் மனோ கணேசனுடன் வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி., எம். 2



# இலங்கையர் 13 பேருக்கும் துருக்கியில் கடும் பாதிப்பு

துருக்கியில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் உயிரைக் காவுகொண்ட நிலநடுக்கத்தில் 13 இலங்கையர்களும் கடுமை யாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருவர் காணாமல்போயுள்ளார் என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட 13 இலங்கையர்களும் பாதுகாப்பாக இருக்கின்றனர் எனவும், காணாமல்போனவர் தொடர்பான தகவல்களை திரட்டும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் அமைச்சர் பந்துள தெரிவித்தார். 2

# சட்டத் திருத்தம் வருகின்றது

1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்தம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத் தின் பிரிவுகளை நடைமுறைப்படுத்தும் போது அதிகாரிகளுக்கு ஏற்படுத்தப்படுகின்ற இடையூறு களுக்கான தண்டனைகளை அதிகரிப்பதற்கும் சட்டவிரோதச் செயல்களை தடுப்பதற்கு 2

## யாழ்ப்பாண வாசி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தனர்.

இலங்கையில் இருந்து சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக நாகை மாவட்டம் கீழையூர் பகுதியைச் சென்றடைந்தபோதே இவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பலவந்தத்தால் மேற்கொள்ளப்படும் தற்போதைய அதிகாரப் பரவலாக்கல் முறையை இல்லாதொழிப்பதற்கு தமது கட்சி முன்னுதாரணமாகி அதனை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"எனக்கு அரசியலில் சேர்வதிலோ வாக்கு கேட்பதிலோ நம்பிக்கை இல்லை. ஆனால், எமது சமூகத்தில் படித்த இளைஞர்கள் இன்று உருவாகியுள்ளனர். பல்கலைக்கழகக் கல்வியைக்கூட அவர்கள் தொடர்கின்றார்கள். பட்டதாரிகளும் உருவாகியுள்ளனர். அவர்களின் சிந்தனை வேறாக உள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 13 இற்கும்......

பௌத்த பிக்குகள் உட்பட சர்வமதத் தலைவர்கள், 13 ஆவது திருத்தத்துக்கு மேலதிகமாகத் தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என ஜனாதிபதிக்கு நான்கு பிரதான பௌத்த பீடங்கள் கூட்டாகக் கடிதம் எழுதியுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் பௌத்த பிக்குகள் 13 ஆவது திருத்தத்துக்கு மேலாக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று அறிவித்துள்ளனர்.

## கிழக்கு நோக்கிப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களப்பை இன்று மாலை சென்றடைந்தது. திங்கட் கிழமை திருகோணமலையைச் சென்றடைந்த பேரணி, இரவு வெருகலில் தரித்தது.

இன்று காலை வெருகல் முருகன் ஆலயத்தில் இருந்து வழிபாடுகளுடன் மீண்டும் தொடங்கியது பேரணி. பல அரசியற் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதிநிதிகள் இந்தப் பேரணிக்கு ஆதரவு வழங்கும் முகமாக அதில் இணைந்து கொண்டனர். தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரம், சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் ஆகியோரும் பேரணியில் இணைந்திருந்தனர்.

மாவட்டத்தின் மதத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் இப்பேரணியில் இணைந்து கொண்டு தங்கள் ஆதரவினை வழங்கினர். மாலை நடைபெறுகின்ற கூட்டத்துடன் பேரணி நிறைவுபெறும்.

## நுவரெலியாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உதயகுமார் எம்.பி., எம். பரணீதரன், ஆர். ராஜாராம், விஸ்வநாதன் ஆகியோரும், அமெரிக்கத் தூதுவர் குழுவில் ஜூலிசங்குடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் ரூபி, யூ.எஸ்.எயிட். துணைப் பணிப்பாளர் டிம் ஆகியோரும் பங்கேற்றனர்.

## 13ஐ அமுல்படுத்த......

தொடர்ந்து இடம் பெற்றுவரும் எல்லைப் பிரச்சினை, மீள்குடியேறிய காணிகளுக்கான உரிமம் வழங்கப்படாமை போன்ற நடவடிக்கைகளுக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியை நியமிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

"நாங்கள் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர்; தமிழ் சமூகமும் முஸ்லிம் சமூகமும் ஒற்றுமையாக புரிந்தணர்வுடன் வாழ வேண்டும் என்றே விரும்புகின்றோம். ஆனால் முஸ்லிம்களின் உரிமைகள் கிடைக்காமல் தடுக்கும் அதிகாரிகளை மாற்றி பக்கசார்பில்லாத அதிகாரிகளை நியமிக்கவே கோருகின்றோம்" ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

## சட்டத் திருத்தம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மான ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகளை உள்ளடக்கி குறித்த சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2020.12.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திட்டமிட்டுள்ளார். .

## இலங்கையர் 13......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இலங்கை அரசு மற்றும் மக்கள்

சார்பில் அமைச்சர் இரங்கல் தெரிவித்தார்.

## 18 இலங்கையர்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யிரிடனம் தமக்கு ஆயிரம் லீற்றர் எரிபொருள் தருமாறு இலங்கைப் படகைச் செலுத்திய நபர் உதவி கோரினார் என்று மொறிஸீயஸ் ஊடகம் ஒன்று தெரிவித்தது.

இலங்கையில் இருந்து படகு டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி புறப்பட்டது என்றும் இடையில் ஜனவரி 15ஆம் திகதி அது இந்து சமுத்திரத்தின் மற்றொரு தீவாகிய டியாகோ கார்சியாவில் (Diego Garcia) தரித்தது என்ற தகவலைப் படகில் இருந்தோர் தெரிவித்திருக்கின்றனர் எனவும் அந்த ஊடகம் தெரிவித்து.

படகு மொறீஸியஸ் கடற்பரப்பினுள் அவதானிக்கப்பட்டபோது அது ரியூனியன் தீவை நோக்கியே வருகிறது என்று எதிர்பார்க்கப்பட்டதாகவும், படகில் இருப்பவர்களை மீட்பதற்கான ஏற்பாடுகளை ரியூனியன் தீவின் அதிகாரிகள் திட்டமிட்டுவிட்டுக் காத்திருந்தனர் என்றும் இன்று திங்கட்கிழமை அது ரியூனியன் கடற்பரப்பினுள் பிரவேசிக்கலாம் என்று பொலீஸ் தலைமையகம் மீட்புப் பணியாளர்களுக்குத் தெரிவித்திருந்ததாகவும் அந்த ஊடகச் செய்தி மேலும் தெரிவித்தது.

ஆனால், படகு திங்கட்கிழமையும் மொறீஸியஸ் தீவின் துறைமுகத்திலேயே தரித்துள்ளது எனத் தகவல் வெளியாகியிருக்கிறது. அது எரிபொருள் நிரப்பிய பிறகு அங்கிருந்து எத்திசை நோக்கிச் செல்லப் போகிறது என்பதைக் கரையோரக் காவலர்கள் தொடர்ந்து கண்காணிக்கவுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அதிர்ச்சியூட்டும் இழப்பு துயரைப் பகிர்கின்றோம்

**துருக்கி மற்றும் சிரியாவில் பேரிடர் ஏற்பட்டுள்ளது. மிகப் பெரும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. 7.8 ரிச்சடர் புள்ளி என்கிற மிக சக்தி வாய்ந்த நிலநடுக்கம் அது. உத்தி யோகபூர்வமாக அறிவிக்கப்பட்டபடி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தை எட்டியிருக்கின்றது. ஆனால் இந்த எண்ணிக்கை 20 ஆயிரத்தை எட்டும் என்று உலக சுகாதார அமைப்பு எதிர்வுகூறியுள்ளது. 20 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். இது மிகப் பெரும் மனிதப் பேரிடர். தாங்கொணாத் துன்பம்.**

**துருக்கி அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படக்கூடிய இடத்தில் தான் அமைந்திருக்கிறது. அங்கு அவ்வப்போது நிலநடுக்கங் கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அவற்றால் உயிரிழப்புகளும் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால், இது போன்ற மனிதப் பேரவலம் எப்போதாவதுதான் நடக்கின்றது.**

**100 ஆண்டகளுக்கு ஒரு தடவை இத்தகைய இழப்புக்கள் ஏற்படுகின்றன என்று துருக்கிய துணை அதிபர் ஃபுவாட் ஒக்டே தெரிவித்துள்ளார். "இதுபோன்ற பேரிடர் 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும். இந்தப் நிலநடுக்கத்தில் இன்னும் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்பதை நாங்கள் உணர்ந்தே இருக்கிறோம். அதை எதிர்கொள்ளவும் நாங்கள் மனதளவில் தயாராகி வருகிறோம்" என்று கூறியிருக்கிறார் அவர்.**

**ஆனால், இதற்கு முன்னர் 1999ஆம் ஆண்டிலும் இதுபோன்ற பேரிடர் நிகழ்ந்துள்ளது. டுஸ்ஸே நகரில் அப்போது 7.4 ரிச்டர் புள்ளிகளாகப் பதிவான அந்த நில நடுக்கத்தால் 17 ஆயிரம் பேர் உயிரிழந்திருந்தனர். வெறும் 24 வருடங்களில் மீண்டும் அதேபோன்றதொரு மனிதப் பேரவலம் நிகழ்ந்துள்ளமை தாங்கிக்கொள்ள முடியாத துன்பம்.**

**இந்த நிலநடுக்கத்தால் 11 ஆயிரம் கட்டங்கள் நொருங் கியுள்ளன. மலை மேடுகளாக அவை குவிந்து கிடக்கும் காட்சிகளே அச்சமூட்டுகின்றன. அவற்றுக்கிடையில் இருந்து பச்சிளம் குழந்தைகள் குற்றுயிரும் குலையுயிருமாக மீட்கப் பட்டுவரும் காட்சிகள் மனதைப் பதைபதைக்கச் செய்கின் றன. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது மாதிரி, நிலநடுக்கத்தின் பாதிப்புக்களில் இருந்து உயிர் தப்பி இருப் பவர்கள் கடும் குளிரினாலும் மழையினாலும் பெரும் பாதிப் படைந்திருக்கின்றனர். மறுபுறத்தில் சிரியாவில் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் மக்களே இந்த நிலநடுக்கத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றார் கள். உலக நாடுகள் உதவிகளை துருக்கிக்கு அள்ளி வழங்கி வருகின்றன. ஆனால் அதேயளவு உதவிகள் சிரியாவுக்கும் கிடைப்பது உறுதிசெய்யப்படவேண்டும். மேற்குநாடுகளுக்கு வேண்டப்படாத ஆட்சியாளர் ஒருவரே சிரியாவில் உள்ள நிலை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் கிடைப்பதற்கான தடையாக ஒருபோதும் இருக்கக்கூடாது. ஐ.நா. உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புக்கள் அதனை உறுதி செய்யவேண்டும்.**

**இந்த மனிதப் பேரிடரில் அந்த மக்களுக்கு பொருளாதார உதவிகளை வழங்கவோ ஆறுதல் அளிக்கவோ கூடிய நிலையில் இலங்கை இல்லை. பாதிக்கப்பட்ட மக்களோடு மானசீகமாகத் தோளோடு தோள் நிற்பதைத் தவிர வேறுவழியில்லை. எங்கள் ஆன்மா எப்போதும் உங்களோடு துணை இருக்கிறது; உங்கள் துன்பத்திலும் துயரத்தையும் நாங்களும் பகிர்ந்துகொள்கிறோம் என்கிற வார்த்தை களைத்தான் தர முடிகின்றது.**

# ஹற்றனில் உழவு இயந்திரம் தானாக இயங்கி விபத்து!

## சாரதி படுகாயம்



ஹற்றன் – டிக்கோயா பகுதியில் உழவு இயந்திரம் ஒன்றும் ஆற்றில் பாய்ந்து விபத்துக் குள்ளாகியதில் படு காயமடைந்த சாரதி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக் கோயா தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற் றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவரு வதாவது –

தொழிற்சாலைக்கு விறகு ஏற் றிக்கொண்டிருந்த போது திடீரென உழவு இயந்திரம் தானாக இயங்கி முன்நகர்ந்துள்ளது.


இதன் போது சாரதி உழவு இயந்திரத்தை நிறுத்துவதற்கு இயந்திரத்தில் ஏறிய போது தடுக்கி விழுந்தார் எனவும் அதனைத் தொடர்ந்து உழவு இயந்திரத்தில் அடிப்பட்டுசாரதி பலத்த காயங்களுக்கு உள்ளானார் எனவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

அதனை தொடர்ந்து குறித்த சாரதி டிக்கோயா கிளங்கன் ஆதார வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 2050 இற்குள் பசுமைப் பொருளாதாரத்தை உறுதி செய்வதற்கான திட்டங்கள் உண்டு!

## ஜனாதிபதி ரணில் உறுதிகூறுகிறார்



புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பசுமைப் பொருளாதாரத்தை ஸ்தா பிப்பதற்கான ஆற்றல் இலங்கைக்கு இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2050 இற்குள் பசுமைப் பொரு ளாதாரம் மற்றும் சிறந்த உலகத்தை உறுதிசெய்ய இயற்கைதழுவல் திட்டம் மற்றும் தேசிய சுற்றுச்சூழல் செயல் திட்டத்தை தயாரித்துள்ளது எனக் கூறியுள்ளார்.

பசுமை வளர்ச் சிப் பாதைக்கு இலங்கையின் மாற்றத்தை விரை வுபடுத்து வதற் கான உத்திகள் மற்றும் நடவடிக் கைகள் தொடர் பான நிகழ்வில் பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

புதிய கால நிலை மாற்றச் சட்டம் உருவாக் கப்படும் அதே வேளையில், புதிய சுற்றுச்சூழல் சட்டம் உருவாக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நக்கிள்ஸ் மலைத்தொடர், ஹற்றன் சமவெளி, சிங்கராஜா காடு, மஹாவலி ஆறு மற்றும் ராமர் பாலம் என்பன அடையாளப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# அரசாங்கத்தின் புதிய வரி விதிப்புக்களால் 500 வைத்தியர்கள் நாட்டைவிட்டு ஓட்டம்

அரசாங்கத்தின் வரி விதிப்பால் அண்மைய நாள்களில் சுமார் 500 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் செயலாளரான வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார். இலங்கையில் ஒருலட்சம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறுபவர்களி டமிருந்து 6 சதவீதம் முதல் 36 சதவீதம் வரை வரி அறவிடப்படுகின் றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வைத்தியர்கள் உட்பட ஏனைய தொழில்சார் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் எதிர்காலத் தில் பாரிய சிக்கல் உருவாகும்.

வைத்தியர்கள் நாட்டுக்கு சேவை செய்யக்கூடிய சிறந்த திறமை படைத் தவர்கள். எனினும், அண்மைய நாள்களில் சுமார் 500 இற்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர். வைத்தி யத்துறையில், தொழிநுட்பத் துறை யில் பணியாற்றுபவர்களும் நாட்டை விட்டுச் செல்ல முடிவெடுத்துள்ள தாகக் குறிப்பிட்டுள்ளார்.

# துருக்கி, சிரிய நிலநடுக்கம் 5,000ஐ எட்டியது உயிரிழப்பு

## நான்கு மடங்கு பேர் இறந்திருக்கலாம் என்கிறது உலக சுகாதார அமைப்பு





துருக்கி, சிரியாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 5 ஆயிரத்தை எட்டியுள்ளது.

துருக்கி மற்றும் சிரியா எல்லையில் திங்கள்கிழமை அதிகாலை 7.8 அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன. இந்த இடிபாடுகளில் சிக்கி இதுவரை 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 4,890 பேர் உயிரிழந்துள்ளனர் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இறந்தவர்களில் 3 ஆயிரத்து 400 பேர் துருக்கியர்கள். இடிபாடுகளுக்குள் இருந்த தொடர்ந்தும் சடலங்கள் மீட்கப்பட்டு வருவதால் உயிரிப்பு எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது.

இந்த நிலநடுக்கத்தால் இரு நாடுகளின் எல்லைப் பகுதி நகரங்களில் கடுமையான சேதம் ஏற்பட்டது. இடிபாடுகளில் சிக்கியுள்ள ஆயிரக்கணக்கானோரை மீட்கும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

நிலநடுக்கத்தில் 11 ஆயிரம் கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளதாகவும், சம்பவ இடத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் துருக்கியின் பேரிடர் மற்றும் அவசரநிலை மேலாண்மை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.6 புள்ளிகளாகப் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.


உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்லும் சூழலில் மீட்புப் பணிகள் மெதுவாகவே இடம்பெறுகின்றன. “கடுமையான பனிப்பொழிவு காரணமாக மீட்புப் பணிகள் மெதுவாகவே நடக்கின்றன. அதுமட்டுமல்லாது நிலநடுக்கத்தின் தாக்கமும் அதிகமாக இருப்பதால் மீட்புப் படைகளுக்கு அது சவாலாக உள்ளது” என்று துருக்கி சுகாதார அமைச்சர் ஃபரத்தீன் கோக்கோ தெரிவித்தார்.

உயிரிழப்பு அதிகாரபூர்வ தகவல்: பூகம்பத்தால் துருக்கியில் தற்போது வரை 3 ஆயிரத்து 400 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 15,834 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் சிரியாவில் இதுவரை ஆயிரத்து 500க்கும் குறையாதவர்கள் உயிரிழந்துள்ளனர். 3,531 பேர் காயமடைந்துள்ளனர். என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு இரு நாடுகளிலும் சேர்த்து இறப்பு எண்ணிக்கை 20 ஆயிரத்தை கடக்கலாம் என அஞ்சுவதாக தெரிவித்துள்ளது. இந்த நிலையில் தான் இன்று காலை துருக்கியின் மத்திய பகுதியில் மையம் கொண்டு 5.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

‘இதுபோன்ற பேரிடர் 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும். இந்தப் நிலநடுக்கத்தில் இன்னும் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்பதை நாங்கள் உணர்ந்தே இருக்கிறோம். அதை எதிர்கொள்ளவும் நாங்கள் மனதளவில் தயாராகி வருகிறோம். நேற்று (பிப்.6) காலை ஏற்பட்ட பூகம்பத்தைத் தொடர்ந்து இதுவரை 145 நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் 3 அதிர்வுகள் 6.0 ரிக்டருக்கும் அதிகமானவை‘ என்றார் துருக்கி நாட்டின் துணை அதிபர் ஃபுவாட் ஒக்டே...

# நிலநடுக்கத்தினை ஏற்கனவே கணித்து சொன்ன ஆய்வாளர்




துருக்கி மற்றும் சிரியாவில் திங்கள் கிழமை அதிகாலை தாக்கிய மிகப்பெரிய நிலநடுக்கத்தை மூன்று நாட்களுக்கு முன்பு கணித்திருக்கிறார் டச்சு ஆராய்ச்சியாளர் ஒருவர். ஃப்ராங்க் கூகர்பீட்ஸ் (frank hoogerbeets) என்ற அவர், துருக்கியில் நிலநடுக்கம் ஏற்படும் என்று மூன்று நாள்களுக்கு முன்பே கணித்து அதை பெப்ரவரி 3ஆம் திகதி கீச்சகத்தில் பதிவிட்டுமுள்ளார்.

பெப்ரவரி-3 அன்று அவர் பகிர்ந்த பதிவில், 'மத்திய மற்றும் தெற்கு துருக்கி, ஜோர்டான், சிரியா, லெபனான் ஆகிய பகுதிகளைக் குறிப்பிட்டு 7.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது' என்று வரைபடத்துடன் கூறியிருந்தார்.

அவர் கணித்து கூறியது போலவே, நேற்று காலை துருக்கி - சிரியா எல்லையில் 7.8 ரிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

நெதர்லாந்தை சேர்ந்த புவியியல் ஆராய்ச்சியாளர் ஃப்ரான்க் ஹூகர்பீட்ஸ், அங்குள்ள புவியியல் ஆய்வு நிறுவனத்தில் ஆராய்ச்சியாளராக உள்ளார். துருக்கி நிலநடுக்கத்தால் தனது மனது நிம்மதியை இழந்துள்ளது எனக் கூறியுள்ள இவர், 'நான் முன்பே கூறியது போல், 115 மற்றும் 526ஆம் ஆண்டுகளைப் போலவே இந்த பிராந்தியத்தில் கூடிய சீக்கிரத்தில் அல்லது தாமதமாகவோ நிலநடுக்கம் நிகழும்.

இந்த நிலநடுக்கங்கள் எப்போதுமே முக்கியமான கிரக வடிவவியலால் ஏற்படுகின்றன. மத்திய துருக்கி மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் கூடுதலான வலுவான நில அதிர்வு நடவடிக்கைகளைக் கவனியுங்கள். ஒரு பெரிய நிலநடுக்கத்திற்குப் பிறகு, நில அதிர்வுகள் பொதுவாக சிறிது நேரம் நீடிக்கும்' என்று நிலநடுக்கத்துக்கு பிந்தைய தனது பதிவில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# உதவிகள் குவிகின்றன



நிலநடுக்கத்தால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள துருக்கிக்கும், சிரியாவுக்கும் சர்வதேச உதவிகள் குவிந்து வருகின்றன.

இது குறித்து துருக்கி அதிபர் எர்டோகன், இடிந்து விழுந்த கட்டடங்களில் சிக்கியு ள்ளவர்களைத் தேடிக் கண்டறிவதற்கும், மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்குமான பணிகளில் உதவியளிப்பதற்கு 45 நாடுகள் முன்வந்துள்ளன என்றார்.

இந்த மோசமான சூழலில் தங்களுக்கு உதவ வேண்டும் என்று சர்வதேச நாடு களிடம் சிரியா அதிபர்அல்-அஸாத்தும் வேண்டுகோள் விடுத்துள்ளர்.

உள்நாட்டுப் போரால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சிரியாவில், வெளிநாட்டு மீட்புக் குழுவினரின் உதவி கிடைப்பதில் பின்னடைவு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்த நிலையில், சிரியா வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'நிலநடுக்கங்களால் சிரியா வல் மிகக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனை எதிர்கொள்ள ஐ.நா. உறுப்பு நாடுகள், சர்வதேச சமுதாயம், செஞ்சிலுவை சங்கம், பிற நிவாரண அழைப்பு கள் எங்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்' என்று கோரப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், துருக்கிக்கும் சிரி யாவுக்கும் பல்வேறு நாடுகள் உதவிக் கரம் நீட்டி வருகின்றன.

இந்த நிலநடுக்கம் குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வெளியிட்டுள்ள கீச்சகப் பதிவில், ''சிரியா, துருக்கியில் நிலநடுக்கத்தால் மிகப் பெரிய உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ள தகவல் வேதனை அளிக்கிறது. துருக்கியில் நிலவரத்தை உன்னிப்பாக கவனிக்குமாறும், அங்கு நடைபெறும் மீட்புப் பணிகளை ஒருங்கி ணைந்து மேற்கொண்டு அனைத்து உதவிகளை அளிக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள் ளேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

சக்திவாய்ந்த நில நடுக்கங்களைத் தொடர்ந்து, துருக்கி அதிபர் எர்டோகனையும், சிரியா அதிபர் அல்-அஸாதையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய ரஷ்ய அதிபர் விளாதிமீர்புதின், இருநாடுகளுக்கும் மீட்புக்குழுவினரை அனுப்புவதாக உறுதியளித்தர். இது குறித்து ரஷ்ய அதிபர் மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், சிரியாவுக்கு கூடிய விரைவில் மீட்புக் குழு வீரர்களை அவரசக் கால பணிகள் துறை அமைச் சகம் அனுப்பும். அதே போல், ரஷிய மீட்புக் குழுவினரின் உதவியை ஏற்பதாக துருக்கி அதிபர் எர்டோகனும் ஒப்புக் கொண்டுள்ளர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



துருக்கியில் நில நடுக்க இடிபாடிகளில் சிக்கியுள் ளவர்களைத் தேடும் பணியை மேற்கொள்வதற் காக, 76 தேடுதல் மற்றும் மீட்புப் பணி நிபுணர்க ளும், 4 மோப்பநாய்களும் அந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது. பிரிட்டனின் அவசரக்கால மருத்துவக் குழு அங்கு நிலமையை ஆய்வு செய்யும் என்று கூறிய அதிகாரிகள், சிரியாவில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதவிப் பணிகளை மேற்கொள்வதற்காக ஐ.நா.வை பிரிட்டன் அரசு அணுகியுள்ளதாகக் கூறினர்.

துருக்கியில் நிலநடுக்கத்தால் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அந்த நாட்டில் மருத்துவமனை ஒன்றை அமைக்கவிருப்பதாக ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்துள்ளது. அதுமட்டுமன்றி, சிரியாவில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு தங்களது அவசரக் கால நிவாரணக் குழுக்களை அனுப்ப முடிவு செய்துள்ளாகவும் அந்த நாடு கூறியுள்ளது.

ஸ்பெயின் பாதுகாப்புத் துறை அமைச்சர் மார்கரிட்டா ரோபல்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, தீயணைப்பு வீரர்கள் மற்றும் உபகரணங்களுடன் தங்களது ஏ-400 ரக ராணுவ விமானம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்தர். மேலும், மீட்புக் குழுவினருடன் இணைந்து பணியாற்ற சிவில் பணியாளர்கள் அடங்கிய ஏர்பஸ் ஏ-330 விமானமொன்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறினர். நிவாரணப் பொருள்கள், உணவு, எரிபொருள் ஆகிவற்றுடன் துருக்கி மற்றும் சிரியாவுக்கு தங்களது தேசிய பாதுகாப்புக் குழுவினர் அனுப்பபடுவர்கள் என்று ஈராக் உறுதியளித்துள்ளது.

இது தவிர, இந்தியா, ஐரோப்பிய யூனியன், ஜெர்மனி, இத்தாலி, கிரீஸ், இஸ்ரேல், உக்ரைன், போலந்து, கத்தர், பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட துருக்கி, சிரியாவுக்கு உதவிக் கரம் நீட்டியுள்ளன.

# 55 அரச நிறுவனங்களை மூடுவதற்கு ஆலோசனை!

## அமைச்சர் பந்துல தகவல்



இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கொண்ட 55 திட்ட அரச அலுவலகங்களை மூட அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

திட்ட அலுவலகங்கள் மற்றும் திட்ட முகாமைத்துவ அலகுகளை மீளாய்வு செய்வதற்கான குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அமைச்சரவை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பந்துல குணவர்தன இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சின் செயலாளர் எச்.டி. கமல் பத்மசிறி தலைமையில் ஜனாதிபதியால் இந்தக் குழு நியமிக்கப்பட்டது. குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 32 திட்ட அலுவலகங்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

46 திட்ட அலுவலகங்கள் குறைந்தபட்ச ஊழியர்களின் கீழ் இயங்க வேண்டும் எனவும் இது தொடர்பான குழு அறிக்கை பரிந்துரைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவையில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் அமைச்சர்களின் கோரிக்கைக்கு அமைய 55 அலுவலகங்களும் மூடப்படுமா என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்க ஜனாதிபதி தனது இணக்கத்தை தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இந்த குழு அறிக்கை தொடர்பில் எதிர்வரும் நாள்களில் நிதி அமைச்சுடன் கலந்துரையாடப்படும். அந்த அலுவலகங்களில் ஆலோசகர்கள் உட்பட பாரியளவிலான ஊழியர்கள் உயர் சம்பள மட்டங்களுக்கு அமைய உள்வாங்கப்பட்டுள்ளனர் என அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கும் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் பெரிய திட்ட அலுவலகங்களைப் பராமரிக்க முடியாத நிலையில், குழுவொன்றை நியமித்து அந்தத் திட்ட அலுவலகங்களை மதிப்பீடு செய்ய ஜனாதிபதி அண்மையில் தீர்மானித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தளர்வடைந்த இருதரப்புறவுகளை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பு!

## பெலாரஸ் நாட்டுத்தூதுவர் திட்டவட்டம்



இலங்கைக்கும் பெலாரஸுக்கும் இடையிலான தொடர்புகள் கடந்த இருவருடகாலமாகப் பல்வேறு காரணிகளால் தளர்வடைந்திருப்பதாகவும், அந்தத் தொடர்புகளை மீளவலுப்படுத்திக்கொள்வதற்கு அவசியமான பேச்சுகளை உரிய தரப்பினருடன் முன்னெடுத்திருப்பதாகவும் இலங்கைக்கான பெலாரஸ் நாட்டுத் தூதுவர் அன்ரேய் ஸெஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதுடில்லியிலேயே பெலாரஸ் நாட்டுத்தூதரகம் இயங்கிவரும் நிலையில் இலங்கையின் 75 ஆவது சுதந்திரதின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நாட்டுக்கு வருகைதந்துள்ள அன்ரேய் ஸெஸ்கி ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையில் மேலும் கூறியவை வருமாறு –

அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் இலங்கையின் 75 ஆவது சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்பதற்காக இங்கு வருகைதந்திருக்கின்றேன். இதன்போது அமைச்சர்கள், உயர் மட்ட அதிகாரிகள், இலங்கை வர்த்தகப்பேரவை (சிலோன் சேம்பர் ஒஃப் கொமர்ஸ்) உள்ளிட்ட வணிகத்துறைசார் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுகளை முன்னெடுத்திருந்தேன்.

இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் வலுப்படுத் துவதே எனது விஜயத்தின் பிரதான நோக்கமாகும். கடந்த இருவருடகாலமாக கொரோனா வைரஸ் பரவல், பொருளாதார நெருக்கடி மற்றும் ஏனைய பூளோகக் காரணிகளால் இருதரப்புத்தொடர்புகள் தளர்வடைந்துள்ளன. எனவே அதற்கு மீண்டும் உத்வேகமளித்துப் புத்துணர்வூட்டுவ தற்கு நான் முயற்சிக்கின்றேன்.

அந்தவகையில் வர்த்தகத்துறை, கைத்தொழில்துறை அமைச்சர், விவசாயத்துறை அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு முக்கிய தரப்பினருடன் இருதரப்பு மற்றும் பல்தரப்பு விவகாரங்கள் தொடர்பில் பேச்சுகளை முன்னெடுத்திருந்தேன். குறிப்பாக இலங்கைக்கும் பெலாரஸுக்கும் இடையில் வலுவான நிலையில் காணப்பட்ட இருதரப்பு வர்த்தகம் கடந்த 2022 ஆம் ஆண்டு சடுதியான வீழ்ச்சியை எதிர்கொண்டது. அதனை மீளக்கட்டியெழுப்புதல் உள்ளடங்கலாகப் பல்வேறு விடயங்கள் தொடர்பாக இலங்கை வர்த்தகப்பேரவையின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினேன்.

மேலும் இலங்கை மாணவர்கள் பலர் பெலாரஸில் கல்வி பயின்றுவருகின்றார்கள். குறிப்பாக பெருமளவான இலங்கை மாணவர்கள் பெலாரஸில் மருத்துவத்துறையில் உயர் கல்வி பயில்கின்றார்கள்.

எனவே கல்வித்துறை உள்ளடங்கலாக இலத்திரனியல் போக்குவரத்து, மருந்தாக்கத் துறை, பசுமைதொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளிலும் இருதரப்பு நல்லுறவை மேம்படுத்திக்கொள்ள எதிர்பார்க்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

### ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில்

# திருடர்களை பிடிப்பதற்கான அமைச்சராவார் பொன்சேகா



ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் திருடர்களை பிடிக்கும் பொறுப்பு தன்னிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

தலையீடு இல்லாமல் பணியை செய்ய அனுமதித்தால், பணியை செய்து, மக்கள் சுதந்திரமாக வாழ்க்கையை நடத்தும் சூழலை உருவாக்குவேன். – என்றார்.

பாணந்துறை நகரில் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# ஜனாதிபதியின் அக்கிராசன உரையில் தேர்தலை காலம்தாழ்த்தும் யோசனை!

## தயாசிறி ஜயசேகர ஊகம்



நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், அக்கிராசன உரையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான யோசனை முன் வைக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் கடந்த ஜனவரி 27 ஆம் திகதி நள்ளிரவு முதல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஒத்திவைக்கப்பட்டது. அதற் கமைய நாளை (புதன்கிழமை) ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதியால் நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டமை தொடர்பில் பல தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையிலேயே சு.க. பொதுச் செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாளை நாடாளுமன்றத்தில் ஆற்றவுள்ள அக்கிராசன உரையின் போது, தேர்தலைக் காலம் தாழ்த்துவது தொடர்பான யோசனை முன்வைக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள இறுதி முயற்சியையும் அனைவரும் இணைந்து தோல்வியடைச் செய்ய வேண்டும். சுதந்திர கட்சி இதில் முன்னின்று செயற்படும். – என்றார்.

# அமைதிப் போராட்டக்காரர்கள் மீது தாக்கு: சர்வதேச மன்னிப்புச்சபை கடும் கண்டனம்!

இலங்கையின் 75 ஆவது சுதந்திரதினத்துக்கு முந்தைய தினம் இரவு அமைதிப் போராட்டக்காரர்கள்மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட தாக்குதலைக் கடுமையாகக் கண்டித்திருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன் தொடர்புடைய அதிகாரிகள் பொறுப்புக்கூறச்செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்கள் தமது அன்றாட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அவ்வாறிருக்கையில், 75 ஆவது சுதந்திரதின நிகழ்வுகளுக்காக அரசாங்கம் 20 கோடி ரூபாவை செலவிடுவதற்கு எதிர்ப்புத்தெரிவித்தும், முறையற்ற நிர்வாகம் மற்றும் அடக்கு முறைகள் போன்றவற்றுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியும் கொழும்பு, மருதானையில் அமைந்துள்ள எல்பின்ஸ்ட் அரங்குக்கு முன்னால் கடந்த வெள்ளிக்கிழமை சத்தியாக்கிரகப் போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளையில் அந்த இடத்துக்கு வருகைதந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர், சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள்மீது நீர்த்தாரைப் பிரயோகம் நடத்தியதுடன் அவர்களை அங்கிருந்து கலைத்தனர். இதன்போது 4 பேர் கைதுசெய்யப்பட்டனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்தச் சம்பவம் தொடர்பாகத் தமது கண்டனத்தை வெளிப்படுத்தியிருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை, 75 ஆவது சுதந்திரதினத்தையொட்டி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்குப் பொதுமக்கள் கொண்டிருக்கும் உரிமைக்கு முற்றிலும் முரணான வகையில் இலங்கை பொலிஸாரால் சட்டவிரோத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன எனச் சுட்டிக்காட்டியுள்ளது. அதேவேளை இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுவது இது முதன்முறையல்ல என்றும் மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

நாம் பார்வையிட்ட காணொளியின் பிரகாரம், அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

அதுமாத்திரமன்றி கைது நடவடிக்கையின் போது தடியடிப்பிரயோகம் நடாத்தப்படுவதையும் அவதானிக்கமுடிகின்றது என்று குறிப்பிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, கைதுசெய்யப்பட்டவர்களைப் பார்வையிடுவதற்கு சட்டத்தரணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள தகவல்கள் தீவிர கரிசனையைத் தோற்றுவித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமைக்கு அதிகாரிகள் மதிப்பளிப்பது அவசியம் என்பதுடன் அதனைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, தொடர்புடைய அதிகாரிகள் பொறுப்புக் கூறச்செய்யப்படவேண்டும் என்றும் மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

# அனைத்துத் தரப்பையும் ஒரே மேசையில் கூட்டி பேச வேண்டியிருக்கிறது

## அமைச்சர் சப்ரி தெரிவிப்பு



கடன்மறுசீரமைப்பு மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் கடன் ஆகியவை தொடர்பில் இன்னும் இறுதி உடன்பாடு எட்டப்படவில்லை. நாணய நிதியத்தையும் இலங்கைக்கு பெருமளவு கடன்களை வழங்கியுள்ளஏனைய தரப்புக்களையும் ஒரே மேசைக்கு அழைத்து ஒரு உடன்பாட்டை எட்டவேண்டியுள்ளது. விரைவில் அதைச் செய்ய முடியும் என்று நம்புகின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி. கட்டாரைத் தளமாகக் கொண்டியங்கும் அல் ஜசீரா ஆங்கிலத் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாணய நிதியத்தின் கடன் மார்ச் மாத இறுதிக்குள் கிடைக்கவில்லை எனின் நிலமை இன்னும் மோசமாகும் என்றும் அவர் எச்சரித்தார்.

அயலுறவுத்துறை அமைச்சர் அந்த நேர்காணலில் மேலும் தெரிவித்ததாவது:

கடன்களை திருப்பிச் செலுத்தவதற்கான சலுகையாகச் சீனா வழங்கியுள்ள 2 வருட கால அவகாசத்திற்கும் நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் ஒரே நிலைப்பாட்டை எட்டுவர் என்று எதிர்பார்க்கின்றோம். இதற்காக நாம் செய்ய வேண்டிய சில நடவடிக்கைகள் இருக்கின்றன. அவற்றைச் செய்ய முடியும் என்று நம்புகின்றோம்.

சீன எக்ஸிம் வங்கி 2 வருட கால அவகாசம் வழங்கி கடிதம் எழுதியதற்குப் பின்னர் அந்த நாட்டுடன் இது தொடர்பில் எந்தப் பேச்சுக்களும் நடத்தப்படவில்லை. ஆனால் விரைவில் பேச்சு நடத்தி இறுதி முடிவை எட்டமுடியும் என்று நம்புகின்றோம். வெகு விரைவில் இதைச் செய்து முடிக்கலாம் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்த ஆண்டு முதல் காலாண்டிற்குள், அதாவது மார்ச் 31ஆம் திகதிக்குள் நாணய நிதியத்தின் கடன் கிடைக்காவிட்டால் நெருக்கடி அதிகரிக்கும். எனவே அதற்கு முன்னர் சாதகமான பதிலைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றோம்.

நாம் ஏற்கனவே எடுத்துள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றால், இலங்கை மக்கள் அதனைப் புரிந்துகொண்டால், மத்திய வங்கியின் அந்நியச் செலாவணி இருப்பைப் பேணினால், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தால் நிலமை மோசமடையாமல் இருப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

வரி அதிகரிப்புக்கள் மூலம் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அரசின் வருமானத்தை 50 சதவீதம் அதிகரித்துள்ளோம் – என்றார்.

# தேர்தல் காலம் தாழ்த்தப்படுமாயின் எதிராக சர்வதேசத்தை நாடுவோம்!

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்



தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் பல்வேறு வழிகளிலும் முயற்சித்து வருகிறது. ஆனால் அந்த முயற்சிகள் வெற்றியளிக்கப் போவதில்லை.

மாறாக ஏதேனுமொரு வழியில் தேர்தல் காலம் தாழ்த்தப்படுமாயின் அதற்கு எதிராக சர்வதேசத்தை நாடுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம். மக்கள் மத்தியிலும் தேர்தலுக்கான எதிர்பார்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

ஆனால், தேர்தலை எதிர்கொள்வதில் காணப்படும் அச்சத்தால் பல்வேறு வழகளிலும் அரசாங்கம் அதனைக் காலம் தாழ்த்த முயற்சிக்கின்றது.

தேர்தல் செலவுகளுக்கு வழங்குவதற்கு பணம் இல்லை என்று கூறுவதற்கு அரசாங்கம் வெட்கப்பட வேண்டும்.

நிதி நெருக்கடியால் தேர்தல் செலவுகளுக்கான பணத்தை வழங்குவது சிக்கல் என்று நிதி அமைச்சு நீதிமன்றத்துக்கும் அறிவித்துள்ளது. ஆனால் இது போன்று தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு முயற்சிகளும் வெற்றியளிக்காது.

மாறாக ஏதேனுமொரு வழியில் அரசாங்கம் தேர்தலைக் காலம் தாழ்த்தினால், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும் மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காகவும் சர்வதேசத்தை நாடுவோம்.

அரசாங்கம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இதுவரையிலும் முன்னெடுக்கவில்லை. இது தேர்தல் இடம்பெறுமா என்பதில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

வேதனையான எதிர்காலம் காணப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். ஆனால் அதற்கு என்ன தீர்வு என்பதை அவர் குறிப்பிடவில்லை.

தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே அதன் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் வெற்றியளிக்க வேண்டும். – என்றார்

# அரச வருவாய் ஜனவரியில் அதிகரிப்பு

2022 ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலப்பகுதியில் அரச வருமானம் 1,806.7 பில்லியன் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது 1,322.0 பில்லியனுடன் ஒப்பிடும் போது 36 வீத அதிகரிப்பு என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2022 நவம்பரில், 220.7 பில்லியனாகவும் ஒக்ரோபரில், 138 பில்லியனாக பதிவாகியுள்ளது. இதனால், ஒக்ரோபருடன் ஒப்பிடுகையில், நவம்பரில் அரச வருவாய் 60 வீதம் அதிகரித்துள்ளது.

இதேவேளை 2022 ஒக்ரோபரில், 120.3 பில்லியனாக இருந்த வரி வருவாய் நவம்பரில் 205.1 பில்லியனாக 70 வீதம் அதிகரித்துள்ளது என்றும் அறிவித்துள்ளது.

# எக்ஸ்பிறஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து: 600 கோடி டொலர் நட்டஈடு கோரல்!

## சுற்றுச்சூழல் பாதிப்பு என மலேஸிய நீதிமன்றில் வழக்குத் தாக்கு

இலங்கையின் கடற்பரப்பில் 2021 ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதியன்று, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்குள்ளானது. இவ்வாறு தீ விபத்திற்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நஷ்டஈடு பெறுவதற்கு சிங்கப்பூர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய சட்ட ரீதியான நடவடிக்கையை இம்மாதம் நடுப்பகுதியில் இருந்து ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்த விபத்தின் காரணமாக ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புகளுக்காக 600 கோடி டொலருக்கும் அதிகமான நட்டஈட்டைப் பெறுவதற்கு சமுத்திர பாதுகாப்பு அதிகார சபை எதிர்பார்த்துள்ளது.

இதேவேளை இலங்கையின் கொழும்பு துறைமுகத்தின் கடல் பகுதியில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடித்ததால் இலங்கையின் கடல் வளத்துக்குப் பெரும்பாதிப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.